பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 29 | ஞாயிற்றுக்கிழமை 13.01.2019 | கதிர் 69


### இனி இது ரகசியம் அல்ல!

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமிழ் ஊடகங்கள் மீது – பத்திரிகை மீது – ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். அதுவல்ல விடயம்.

அப்படிப் பத் பக்கம் 02

# சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு இப்போது என்றுமில்லாத ஆதரவு!



## இந்தச் சரியான சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்தவேண்டும் என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜனவரி 13

கடந்த போர்ச் சூழலில் இல்லாத ஆதரவு உலக அரங்கில் தமிழர்களுக்குக் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்கப்போவதில்லை.

- இவ்வாறு குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 02

## பொதுஜன பெரமுன தனித்தே வெல்லும்!

### மஹிந்த அணி இறுமாப்பு

கொழும்பு, ஜன. 13

பொதுஜன பெரமுன எவருடனும் கூட்டணியமைத்துத் தான் தேர்தலில் வெற்றிபெறவேண்டிய நிலை கிடையாது. தனித்து போட்டியிட்டே வெற்றி பெறமுடியும் என நாடாளுமன்றஉறுப்பினர்ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – பக்கம் 11

## புதிய அரசமைப்பு முயற்சி கிணற்றில் போடப்பட்ட கல்!

### சிவசக்தி ஆனந்தன் விமர்சனம்



வவுனியா, ஜன. 13

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கை கிணற்றில் போடப்பட்ட கல்லுப்போல அசையாது உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறியுள்ளார்.

வவுனியா பக்கம் 11

## வெளிநாடுகளின் தேவைக்கு ஏற்பவே புதிய அரசமைப்பு

### சாடுகின்றார் விஜேதாஸ ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 13

முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசமைப்பு யோசனை வெளிநாட்டுச் சக்திகளின் தேவைக்கு ஏற்ப இடம்பெறுவது உறுதியாகியுள்ளது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நாடு இருக் பக்கம் 11

## பல்கலைக்கழகங்களுக்கு 31,158 மாணவர் அனுமதி

கொழும்பு, ஜன. 13

2018/2019ஆம் கல்வியாண்டில் 31 ஆயிரத்து 158 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்மூலம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்ற ஒரு லட்சத்து 67 ஆயிரத்து பக்கம் 11

## மைத்திரி – மஹிந்த கூட்டணி இறுதி முடிவு 21 ஆம் திகதி

கொழும்பு, ஜன. 13

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து உருவாக்க முயற்சித்து வரும் கூட்டணி சம்பந்தமான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 21 ஆம் திகதி பக்கம் 11

## வரவு – செலவுத் திட்டத்துக்கு சு.க. எம்.பிக்கள் சிலர் ஆதரவு

### அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

அரசின் 2019ஆம் ஆண்டுக்கானவரவு–செலவுத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் ஆதரவு கட்டாயம் கிடைக்கும் எனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறை, பண்டாரகம பிர பக்கம் 11

## சவேந்திர சில்வாவுக்கு எதிராக சுயாதீன விசாரணை அவசியம்

### மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 13

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுகள், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு பக்கம் 11

## 'ஒருமித்த நாடு' பதத்தால் ஐ.தே.கவுக்குள் குழப்பம்!

கொழும்பு, ஜன. 13

புதிய அரசமைப்பு யோசனையில், சமஷ்டிக்கான தன்மைகள் உள்ளடக்கப்படுமானால், அதற்குத் தாங்கள் ஆதரவளிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பக்கம் 11

## புதிய அரசமைப்புக்கு எதிராக சுதந்திரக் கட்சி போர்க்கொடி!

கொழும்பு, ஜன. 13

வடக்கு – கிழக்கை இணைக்கும் யோசனை புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படுமானால் அதற்கு எதிராக வாக்களிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று அறிவித்தது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு வரைவுக்கான பக்கம் 11

## அமெரிக்காவுக்கு மங்கள

கொழும்பு, ஜன. 13

சர்வதேச நாணய நிதியத்தில் கடனை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகளை முன்னெடுக்கும் நோக்கில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள பக்கம் 11

## ஆசியாவில் சம்பந்தனைப் போல் சிறப்பான தலைவர் எவருமில்லை

### வடக்கு ஆளுநர் சுரேன் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜன. 13

ஆசியாக் கண்டத்திலேயே சம்பந்தனைப் போல் ஒரு சிறப்பான தலைவரைக் காணக் கிடைக்காது என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் முதல் தெரிவாக எதற்காக தமிழ்த் தேசியக் பக்கம் 11

## வன்னிப் பல்கலைக்கழகத்தை உடனே ஆரம்பிக்கவேண்டும்

### முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் கோரிக்கை



கொழும்பு, ஜன. 13

வவுனியாவில் இயங்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை வன்னிப்பல்கலைக் கழகமாக தரமுயர்த்துவது தொடர்பிலான பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# புதிய அரசமைப்பு நிறைவேறாது கூறுகின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜன. 13

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாது என, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு விஜயம் செய்த அவர், மாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பு யோசனை, அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து விவாதங்கள் இடம்பெறவேண்டும்.

அரசமைப்பொன்றை எடுத்த எடுப்பில் நிறைவேற்றிவிட முடியாது. இந்த நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இந்த அரசுக்கு இல்லை என்பது அனைவருக்கும் நன்கு தெரியும்.

அவர்கள் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உடன் இணைந்தே பெரும்பான்மையைக் காட்டியுள்ளனர். அவர்களை இணைத்துக் கொண்டாலும் அவர்களினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியாது. அவர்களுக்கு இன்னும் 20 – 25 பேரின் ஆதரவு தேவையாகவுள்ளது.

எனவே, இந்த அரசமைப்பை ஆராய்ந்து, அதனை நிறைவேற்ற முடியும் என நான் நம்பவில்லை – என்றார்.(ஐ)

## ரணிலுக்கு ராகுல் வாழ்த்து

கொழும்பு, ஜன. 13

இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் மீண்டும் பிரதமராகப் பணிகளை தொடர வாய்ப்புக் கிட்டியமைக்காக எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்மைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி. அதனால் உருவான அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஏற்பட்ட சவால்கள் ஜனநாயகத்தை நேசிக்கும் எமக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியது. எனினும் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை நம்பிக்கையும், உச்சநீதிமன்ற தீர்ப்பு இலங்கை நாடாளுமன்ற ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்தும் நல்ல முன்மாதிரியையும் காண்பித்துள்ளன.

– என்று ராகுல் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். (ஐ)

## யாழ் இந்துவின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், கல்லூரி அதிபர் சதா நிமலனின் தலைமையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிமுதல் பொங்கல் நிகழ்வுகளுடன் கூடிய கலாசார, சுதேசிய விளையாட்டுக்களை உள்ளடக்கிய பொங்கல் விழா நடத்தப்படவுள்ளது,

முற்பகல் 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இருந்து சிலம்பாட்டம், பொய்க் கால் குதிரை ஆட்டம், மாட்டு வண்டி பவனி ஆகிய பாரம்பரிய அம்சங்களுடன் கூடிய கலாசார நடைபவனி யாழ் நகரினை வலம்வரும். தொடர்ந்து கலாசார நிகழ்வுகளின் ஆற்றுகைகள் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். (ஐ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கருத்துக்களால்களமாடுவோம்' எனும் தொனிப்பொருளிலான அரசியல் கருத்தரங்கு நேற்றுச் சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சந்திரிகாவின் தீர்மானத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஒஸ்லோ தீர்மானத்தைக் கைவிட்டனர். ஆனால் அதனை குற்றங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காக நாங்கள் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவோம் என்று இலங்கை அரசு உலகத்துக்குக்கொடுத்தவாக்குறுதி அது.

அதனைநிறைவேற்றப்பண்ணுவது எப்படி என்பதே இன்றைய சூழலில் உள்ள கேள்வி.

எனவே, மென்வலுவிலே இருக்கும் பிரதான பாகம் உலகத்தின் ஆதரவே. வன்முறையற்ற ஜனநாயக வழியிலே நாங்கள் பயணிக்கிறோம் என்று அவர்கள் நம்புகின்றபோது எமக்கான தீர்வை நாம் பெற்றுக்கொள்ளலாம்.



நான் விமர்சிக்கவில்லை.

அந்தந்தச்சூழலிலே அவர்கள் எடுத்த தீர்மானம் அது. அந்தச் சூழலுக்கு போய் நாம் தீர்வைக் காண முடியாது.

ஆனால் இதுவரை நாம் தவறவிட்ட அந்தப் படிப்பினைகளை வைத்து இன்னுமொரு சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடலாமா?

இன்று உலகில் ஒரு நாடு கூடத் தவறாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

ஆனால்போர்நடந்தகாலத்தில் 33 நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளைப்பயங்கரவாத அமைப்பு என்று தீர்மானித்தன. இப்போதுள்ள ஆதரவு அன்று இருக்கவில்லை.

ஆனால் இன்றுள்ள இந்தச் சாதகமான சூழ்நிலையை எமது மக்களுக்காக உபயோகிக்கப் போகின்றோமா என்பதுதான் இன்று இருக்கும் கேள்வி.

சர்வதேச சமூகம் இன்று எங்களோடு நிற்கிறது. புதியதொரு அரசமைப்பைக் கொண்டு வருவோம் என்று சொல்லி 2015 ஆம்ஆண்டு உலகுக்குவாக்குறுதி கொடுத்தது இலங்கை அரசு.

அதிலும் இடம்பெற்ற யுத்தக் சிங்கள மக்களுக்குரியதை நாம் கேட்கவில்லை. ஆனால் எங்களுக்குரியதைநீங்கள் தடுத்து வைத்திருக்காதீர்கள் என்றுதான் கேட்கின்றோம். நாடு பிரிந்துவிடும் என்பது அவர்களுக்கு இருக்கும் பயம்.

ஆனால் ஒரு நாட்டுக்குள்ளே தான் தீர்வு என்பதை அவர்கள் உணர வேண்டும். மீண்டும் வன்முறையில் இறங்கமாட்டோம் என்கின்ற செய்தியும் அவர்களைச் சேரவேண்டும்.

இந்த ஆட்சிக் காலத்திலே அரசமைப்பை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. அந்தச் சந்தர்ப்பங்களை நாங்கள்தான் ஏற்படுத்தவேண்டும்.

இன்று ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் நாங்கள் இருக்கிறோம். ஆனால் நாம் அதைக்காட்டிக்கொள்ளவில்லை.

எங்கள் அணுகுமுறையும் முன்னேற்றமும் நிதானமாக செய்யப்படவேண்டியது அவசியம். எங்கள் இருப்பைப்பாதுகாப்பதற்கு செய்யவேண்டியசிலதருணங்கள் இருக்கின்றன. அதற்கு உலகத்தினுடைய ஆதரவும்தேவையானது. எனவே உலகத்தோடும் அனுசரித்து செயற்படவேண்டும்–என்றார்.(ஐ)



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிகைகள் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதே வேறு முக்கியமான ஒரு விடயம் நம்மைக் கடந்து போய் விடும் போல் தெரிவதால் இந்த உஷார் அறிவிப்பு.

புதிய அரசமைப்புக்காக நிபுணர் குழு தயாரித்த மாதிரி வடிவம் உட்பட்ட பல்வேறு ஆவணங்கள் அடங்கிய அறிக்கைகள் நேற்று முன்தினம் அரசமைப்புப் பேரவையாகக் கூடிய நாடாளுமன்றத்தில் சர்ப்பிக்கப்பட்டனவல்லவா?

புதிய அரசமைப்புக்கான அந்த யோசனை தொடர்பில் தமிழ் ஊடகங்கள் எப்போதும் நம்பிக்கை தரும் செய்திகளை வெளியிடுவதில்லை, மக்களுக்கு அவநம்பிக்கையை ஊட்டும் செய்திகளையே வெளியிடுகின்றன என்றார் அவர்.

அதற்கு உதாரணமாக நேற்று பத்திரிகைகளில் வெளியானவை என்று தெரிவித்து சில தலைப்புக்களையும் கூறினார்.

அதில் ஒன்று *"ஒற்றையாட்சிக் குள்தான் தீர்வு என்று பிரதமர் அறிவிப்பு"* – என்பதும் என்றார் சுமந்திரன்.

ஏதோ பிரதமர் ஒற்றையாட்சிக்கு வெளியில் வந்து தீர்வைத் தரப் போகின்றார் என்ற மாதிரியும், அதை மூடிமறைத்து ஊடகங்கள் அவநம்பிக்கை ஏற்படுத்துகின்றன என்ற தொனியிலும் அவரின் குற்றச்சாட்டு இருந்தது.

ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் அவரது குற்றச்சாட்டுகள் இருந்து விட்டுப் போகட்டும். அது விவகாரமே அல்ல.

ஊடகங்களைக் குற்றச்சாட்டும் வழியில் ஒரு முக்கிய விடயத்தை சுமந்திரன் மூடி மறைக்க முயல்கின்றார் என்பதுதான் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

இதுவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உரைகளில் *'ஒற்றையாட்சியே பேணப்படும்'* என்று கூறி வந்தாலும் –

அது சுமந்திரன் கூறுகின்றமை போல *'ஏக்கிய இராஜ்ஜிய/ ஒருமித்த நாடு'* என்ற விவகாரமாக இருக்குமோ என்ற ஐயுறவு எங்களில் பலருக்கு இருந்தது.

அதனால் *'ஒற்றையாட்சி முறைமையே நீடிக்கும்'* என்று சிங்களத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறி வந்தமையை நாம் – தமிழர்கள் – அதிகம் ஸீரியஸாக எடுக்கவில்லை. அது சிங்கள மக்களைத் திருப்திப்படுத்திச் சமாளிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்யும் சமாதானம் என்றே நாங்கள் கருதி வந்தோம்.

ஆனால், நேற்று முன்தினம் அரசமைப்புப் பேரவையாக நடாளுமன்றம் கூடிய போது அங்கு பிரதமர் கூறிய *'ஒற்றையாட்சி'* அதுவல்ல என்பது திட்டவட்டமாகத்தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின்படி இந்த நாட்டின் ஆட்சி முறைமை ஒற்றை ஆட்சிதான். அதனை இலங்கை அரசமைப்பின் 2 ஆவது ஷரத்து தெளிவாகக்கூறுகின்றது. (The Republic of Srilanka is a Unitary State)

அதேபோன்று பௌத்துக்கு முதன்மை இடம் அளிக்கும் ஏற்பாடுதற்போதைய அரசமைப்பின் 9 ஆம் ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனி, நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் – அரசமைப்புப் பேரவையில் – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ன கூறினார் என்பதைப் பார்ப்போம்.

*"சமஷ்டி முறைமை இல்லை. ஒற்றையாட்சியே இருக்கும். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வை வழங்குவது பற்றியே பார்க்கிறோம்.*

*"(தற்போதைய அரசமைப்பின்) 2 ஆவது ஷரத்தும் 9ஆவது ஷரத்தும் பாதுகாக்கப்படுவதோடு புதிய அரசமைப்பு உருவாக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.*

*இதற்கு மாற்றான கருத்துடைய யோசனைத் திட்டங்களை உங்களுக்கு நாங்கள் சமர்ப்பித்துள்ளோம் என்பதற்காக அவற்றை நாங்கள் புதிய அரசமைப்பில் உள்ளடக்குவோம் என்பதல்ல."*

– இப்படித் தெளிவாகக் கூறியிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தற்போதைய அரசமைப்பில் ஒற்றையாட்சி பற்றிய 2 ஆவது ஷரத்தை முற்றாகப் பாதுகாக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்றும் –

அதற்கு மாறான விடயங்கள் தற்போதைய மாதிரி யாப்புக்கான வடிவமாக இடம்பெற்றாலும் அவை புதிய அரசமைப்பில் இடம் பெறும் என்பது அர்த்தமல்ல என்றும் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிய பின்னர் இனிமேலும் *'ஒருமித்த நாடு/ ஏக்கிய இராஜ்ஜிய'* என்ற சொல்லாடல்களை நம்பி யாது பயன்?

தற்போதைய அரசமைப்பின் 2ஆவதுஷரத்தைப்பாதுகாப்பதில் ஐ.தே.க உறுதியாக உள்ளது என்பதுதான் பிரதமர் ரணிலின் நிலைப்பாடு என்றால் –

*'ஒருமித்த நாடு'/ 'ஏக்கிய இராஜ்ஜிய'* – என்ற சொல்லாடல்களை வைத்துக் கொண்டு இனியும் கனவுலகில் சஞ்சரிப்பதில் அர்த்தமில்லை.

இந்தத் தீர்வு முயற்சி மூலம் சமஷ்டி அடைப்படையிலான ஒரு திட்டம் கிடைக்கும் என்று இன்னும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் சுமந்திரன், ஊடகங்களை வைவதை விடுத்து, பிரதமரின் இந்த உறுதியான கருத்து வெளிப்பாட்டின் விளக்கத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் நல்லது.

நாட்டின் ஆட்சி முறைமை ஒற்றையாட்சிதான் எனத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்ற தற்போதைய அரசமைப்பின் 2 ஆவது ஷரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றமை போல அப்படியே பேணிப் பாதுகாத்துக் கொண்டு, அதற்கு மாறான சமஷ்டித் தீர்வு ஒன்றையும் அதற்குள் உள்ளடக்கும் வகையிலான புது விதமான சொல்லாடல் எதனையும் கூட சுமந்திரன் இனிக் கண்டுபிடித்து வெளிப்படுத்தலாம்.

எதற்கும் அவரின் தெளிவுபடுத்தலை எதிர்பார்க்கிறோம்.

– இதற்குப் பின்னரும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு இன்னும் இந்த யோசனைத் திட்டம் மூலம் இடம் இருக்கின்றதா என்பது உட்பட.

- மின்னல் -

# அரசமைப்பு மாற்றத்தை எதிர்ப்பவர்கள் நாட்டை நேசிப்பவராக இருக்க முடியாது

## கலாநிதி ந.குமரகுருபரன் தெரிவிப்பு



தமிழினத்தைப் பொறுத்தவரை இனப் பிரச்சினைகான தீர்வு முன்னுரிமைக்குரியது என்பதை மஹிந்த அணியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் புரிந்துகொள்ளாது அடுத்த கட்ட மாக பார்க்கலாமென அறிவிப்பதன் மூலம் தமிழினத்தின் ஆதரவை நிராகரித்துள்ளனர் என்பது வெள்ளிடை மலைஎன தமிழ் தேசிய பணி குழு தலைவரும், மேல்மாகாணசபை முன் னாள் உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

நாகரிகமான அரசியலாகவே முற்றான புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழ் தேசிய கூட்ட மைப்பின் இணக்க தன்மையை சரணாகதி அரசியல் என எண்ணுவது அரசியல் மடைமைத்தன மானது .

இன்று சோபித தேரரை நினைவுகூரும்போது நேர்மையான அரசியல் செய்பவர்கள் உண்மை யில் அவர் கண்ட நல்லாட்சியை ஆட்சிமாற்றத்திற்கூடாக சிங்கள அரசியல் தலைவர்கள் அடையப் பெற கிஞ்சித்தும் முயற்சிக்க வில்லை என்பதே உண்மை. நான் அன்று அவருடன் பேசிய போது மிக தெளிவாக சோபித தேரர் சொன்ன விடயம் முதலில் எமது கடமை ஆட்சிமாற்றம் ஊடாக நல்லாட்சியை ஏற்படுத்துவது அதன் பின்னரே அர சியல் தீர்வு பற்றி பேசுவோம் என் பதே.

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதுதான் அரசமைப்பு மாற்றத் தின் முக்கியவிடயதானம். அதை மறந்து கடந்த தேர்தலில் மக்கள் கொடுத்துள்ள ஆணையை மீறி முதலில் பொதுத்தேர்தல் பின்னர் அரசியல் தீர்வு பற்றி பேசலாம் என இன்று கூறுவது என்பது மூன்று தசாப்த கால யுத்தத்தை அழிவு களை கருத்துக்கெடுக்காத நிலைப் பாடே ஆகும்.

ஓர் அரசியல் அவதானியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்த எடுத்த முயற்சிகள் நேர்மையா னவை காத்திரமானவை என்றே கூறுவேன்.

வரலாற்றை மறந்து அரசமைப்பு மாற்றத்திற்கு இடமளியோம் என்பவர் கள் ஒரு பொழுதும் இந்த நாட்டை உண்மையாக நேசிப்பவர்களாக , தேசப்பற்றாளர்களாக இருக்க முடியாது.

இந்த நாட்டை உண்மையாக நேசிப்பவர்க ளாக , தேசப்பற்றாளர்களாக இருப்பார்களேயா னால் இந்த நாடும் இங்குள்ள அனைத்து மக்க ளும் வளமான சகவாழ்வு கண்டு நாடு சுபீட்சம் பெற்றிட இனப்பிரச்சினைக்கான தீர்வடங்கிய அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்க வேண டும் எனவும் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள் ளார்.

# ராஜரட்ட பல்கலைக்கழகம் 16 இல் மீளவும் ஆரம்பம்

ராஜரட்ட பல்கலைக்கழகத்தின் மிஹிந்தலை வளாகம் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் கல்வி நட வ டிக்கைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழக பதிவாளர் கூறியுள்ளார்.

அதன்படி மிஹிந்தலை வளாகத்தின் அனைத்து பீடங்களும் கல்வி நடவ டிக்கைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆகவே விடுதியில் தங் கியுள்ளமாணவர்கள் அனை வரும் 15 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் தமது விடுதிகளுக்கு வருகை தருமாறு பல்கலைக்கழக பதிவாளர் கூறியுள்ளார்.

# காணாமல்போன உறவுகளின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கல்

வவுனியா,ஜன.13

வவுனியாவில் காணாமல்போன உறவுகளுக்கு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்றையதி னம் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 691 நாள்களாக வவுனியாவில் தொடர்ந்து சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப் பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சங்கத் தின் உறவுகள் 50 குடும்பங்களுக்கு நேற்றையதினம் அறம் செய் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் ஆர். ஞானசேகரம், பொருளாளர் செல்வி த.கலைமதி கலந்துகொண்டு போராட்ட களத்தில் தொடர்ந்து போராட்டத்தை மேற்கொண்டு வரும் 50 காணாமல் போன குடும்பங்களின் உறவுகளுக்கு தைத்திரு நாளை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகளை வழங் கினர்.




# 'சைத் சிட்டி' வீட்டுத் திட்டம் மக்களிடம் கையளிப்பு




மன்னார் மாவட்டத்தின் உப் புக்குள கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் கற்பிட்டியில் சுமார் இருபத் தைந்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் உப் புக்குள மக்களின் மீள்குடியேற் றத்திற்கென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், கைத்தொழில் மற்றும் வர்த் தகம், நீண்டகால இடம்பெயர்ந் தோர் மீள்குடியேற்றம், கூட்டு றவு அபிவிருத்தி அமைச்சரு மான றிஷாத் பதியுதீனின் வேண்டுகோளை ஏற்று ஐக் கிய அரபு அமீரகத்தின் UAE AID - Emirates Red Crescent தொண்டு நிறுவனத் தினூடாக நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் தொகுதி நேற்று முன்தினம் (11) ஐக்கிய அரபு அமீரக தனவந்தர்கள் மற்றும் தொண்டு நிறுவனத்தின் உயரதி காரிகள் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

சைத் சிட்டி என்று பெயரி டப்பட்டுள்ள இவ்வீட்டுத்திட்டத் தில் சுமார் 120 வீடுகள், கடைத் தொகுதி, மாநாட்டு மண்டபம் ஆகியவை நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மன்னார், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் முக் கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா நானுஓயா பகுதியில் புதிய மும்மொழி தேசிய பாடசாலை



நானுஓயா,ஜன.13

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும், தற்போதைய விசேட பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி. வே. இராதாகிருஷ்ண னின் வேண்டுகோளின்படி கடந்த வருடம் அமைச்சரவையி னால் நுவரெலியா நானுஓயா பகுதியில் புதிய மும்மொழி தேசிய பாடசாலை ஒன்றை அமைப்பதற்கான அங்கீகா ரம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதற்கானவேலைகள் முன்னெ டுக்கப்பட்ட நிலையில் நேற்று அந்த பகுதிக்கு விசேட பிராந்தி யங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் இராதாகிருஷ்ணன் விஜயம் செய்ததோடு, அவ ரோடு, கல்வி அமைச்சின் அரு கில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத்திட் டத்தின் செயல்திட்ட பணிப்பா ளர் பத்மன் தலைமையிலான கட்ட கலைஞர், பொறியியலா ளர் ஆகியோர் விஜயம் செய்த னர்.

இதன்போது அங்கு ஆரம்ப கட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பாடசாலையை நிர் மாணிப்பதற்காக சுமார் ரூபா 60 கோடி நிதி ஒதுக்கீடுசெய்யப் பட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவத்தை வெகுவிரைவில் பிரதமர் மற்றும் கல்வி அமைச் சரின் தலைமையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என அமைச்சர் இராதாகிருஷ்ணன் இதன்போது தெரிவித்தார்.

# தேசிய பாடசாலையின் அதிபர் நியமனத்தில் தாமதம் என்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியம னத்தில் தாமத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் 51 நாள்கள் நீடித்த அரசியல் நெருக்கடி யின் காரணமாக தடங்கலுக்குள்ளான 353 தேசி யப் பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை மேலும் தாமதிக்கப்படுகிறது.

ஒக்டோபர் 26 ஆம் திகதி அரசாங்கம் பதவி நீக்கப்படுவதற்கு முன்னதாக நேர்முகப் பரீட்சை யொன்றுக்குத் தோற்றுமாறு கேட்கப்பட்ட அதிபர் பரீட்சார்த்திகள் தங்களது நியமனங்களுக்காக இன்னமும் காத்திருக்கிறார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்திருக்கிறது.

தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு 303 வெற்றிடங்கள் இருக்கின்றன. இப்போது அந்த பாடசாலைகள் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்ட பதில் அதிபர்களால் நிருவகிக்கப்படுகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வேதம் ஓதுகின்றது சாத்தான்!

'சாத்தான் வேதம் ஓதுவது' என்பார்கள். நேற்று முன்தினம் நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடியபோது அங்கு முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ கூறிய கருத்துகள் இந்த முதுமொழியைத்தான் நினைவுபடுத்தின.

*"ஓர் இனம் மற்றுமோர் இனத்தை அடக்கி, ஒடுக்கி, மிதித்து ஆள முற்படக்கூடாது. நாட்டில் உள்ள அனைத்து இனங்களுக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தும்."* – என்று அவர் திருவாய் மொழிந்திருப்பதைக் கேட்க அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றது.

இந்தச் சுடலை ஞானம் அவருக்கு எப்போதோ பிறந்திருக்குமானால், இந்த இலங்கைத் தீவு அதன் வரலாற்றில் சந்தித்த மிகக் கோரமான – கொடூரமான – போரையும் மனிதப் பேரவலத்தையும் சந்திக்க வேண்டி வந்திருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த பரகசியம்.

இந்த இலங்கைத் தீவில், ஓரினம் மற்றைய இனத்தை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி ஆளும் முறைமையைத் தவிர்த்து, அதிகாரப் பரவலாக்கல் மூலம் இந்த நாட்டின் நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காணும் எத்தனமாகவே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி நடைபெறுகின்றது.

அது சிங்கள மக்களினதும் ஏகோபித்த ஆதரவுடன் கொண்டு வரப்பட்டால்தான் நின்று, நிலைத்து நீடிப்பதுடன் நியாயமானதாகவும் அமையும் என்பது தமிழர் தரப்பின் பிரதிநிதியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்துகின்றார்.

அத்தகைய தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியை பேரினவாதக் கிளர்ச்சியைத் தூண்டுவதன் மூலம் முறியடிக்கும் தீவிர எத்தனத்தில் ஒருபுறம் ஈடுபட்டபடி, மறுபுறத்தில் ஓர் இனம் மற்றோர் இனத்தை அடக்கி ஆள முற்படக்கூடாது என்று மஹிந்தர் கூறுவது நகைப்புக்கிடமானதாகும்.

இந்த வகையில் பார்த்தால் –

"மஹிந்த அணியினர் போலியான தேசப்பற்றாளர்கள். தேசப்பற்றாளர்களாக அவர்கள் நடிக்கின்றார்கள். சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தைத் தூண்டும் படுமோசமானவர்கள் அவர்கள்." – என்று சம்பந்தன் நாடாளுமன்றத்தில் விமர்சித்தமை முற்றிலும் உண்மையானது.

நீண்ட காலம் இழுபடும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் ஓர் இணக்கமான யோசனைத் திட்டத்தை உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானம் 2016 ஜனவரியில் இலங்கை நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றில் ஒரு பிரதிநிதி கூட அதை எதிர்க்கவில்லை. இந்த இலக்கை அடைவதற்காக முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புத் பேரவையாக மாறிச் செயற்படுவது என்ற தீர்மானமும் கூட ஏகமனதாகவே முன்னெடுக்கப்பட்டது.

அதன் விளைவாக அரசமைப்புச் சபையும், அதன் கீழ் வழிகாட்டல் குழுவும், அதற்குக்கீழ் ஏழு உபகுழுக்களும் அமைக்கப்பட்டு பல நூறு மணித்தியாலங்கள் பல மட்டங்களில் கூடி, விவாதங்களை நடத்தி, இடைக்கால அறிக்கை, உபகுழுக்களின் அறிக்கை என்று பல விடயங்களை முன்வைத்து, இறுதியாக சில யோசனைத் திட்டங்கள் இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் நாம் சுட்டிக் காட்டியபடி மலையைக் கெல்லி எலியைப் பிடித்த வேலையாக புதிய அரசமைப்புக்கான நகல் யாப்பை ஒத்த ஒரு வடிவத்தை நிபுணர் குழு தயார் செய்து முன்வைத்திருக்கும் நிலையில் –

வழமைபோல, அமைதி முயற்சிகளைக் குழப்பும் தனது பேரினவாதக் கைவரிசையை மஹிந்தர் தரப்பு ஊடாகக் காட்ட முயல்கின்றது பௌத்த, சிங்கள மேலாதிக்க இனவாதம்.

தற்போதைய இணக்க நிலைப்பாடை தனது பேரினவாதச் சிந்தனை காரணமாகவும், அதிகாரத்தைத் தாம் எட்டுவதற்கு இனவாதத்தை ஊதிப் பெருப்பித்து கிளறுவதே வசதியானது என்ற களநிலைமையாலும் குழப்பியடிக்க முயல்கின்றார் மஹிந்தர்.

இதற்காக, இனவாத சக்திகள் அவர் தலைமையில் ஒன்று திரளுகின்றமை கண்கூடு.

அதன் காரணமாக –

தீர்வுக்காக தற்போது வழிகாட்டல் குழு மூலம் நீண்ட விவாதங்கள், ஆய்வுகள், கலந்துரையாடல்கள் வாயிலாகத் தயாரிக்கப்பட்ட யோசனைத் திட்டங்கள் கிடப்பில் போடப்படும் நிலைமை உருவாகியுள்ளது.

தீர்வுக்காக கடந்த எழுபது ஆண்டுகளாக இந்த நாட்டில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பெறுபேறாக எட்டப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், மங்கள முனசிங்க அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுப் பொதி என்ற பல்வேறு ஆவணங்கள் இப்போது அலுமாரிகளுக்குள் வரிசையாக வெறும் தஸ்தாவேஜுக்களாக அடங்கிப் போனமை போன்று தற்போதைய நிபுணர் குழு ஆவணம் உட்பட்ட அனைத்தும் அவற்றுடன் சேர்ந்து வெறும் ஆவணமாக அடங்கிப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது தெளிவு.

தற்போதைய முயற்சிகளை முறியடிக்கும் தனது திட்டத்தில் முன்னேறி நியாயம் உரைப்பது போல மஹிந்தர் தத்துவம் பேசுகின்றமை வேடிக்கையன்றி வேறில்லை.

# கல்வி அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய போதைப்பொருள் ஒழிப்பு வாரம் பிரகடனம்



போதைப்பொருள் ஒழிப்பை மாணவர்களின் மூலம் கற்றுக்கொள்வோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களையும் பெற்றோர்களையும் இலக்காகக் கொண்டு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் வழிகாட்டலின் கீழ், கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம், ஜனவரி மாதம் 21 முதல் 25 ஆம் திகதி வரை போதைப்பொருள் ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகம் உட்பட அரச நிறுவனங்கள் இணைந்து ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கல்வித் துறை சார்ந்த அதிகாரிகள்,அதிபர்களை தெளிவூட்டுவதற்கான அனைத்து ஆலோசனைகளும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்ததாவது:–

போதைப்பொருள் ஒழிப்பை வாழ்க்கையில் பழக்கமாக முன்னெடுக்க வேண்டும். போதைப் பொருளுக்கு மாணவர்கள் அடிமையாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது சமூக அழிவுக்கு உந்து சக்தியாக அமையும். ஆகவே இந்த விவகாரம் மிகவும் பாரதூரமானது. சுற்று வட்ட சமூக சூழல், மாணவர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்குகின்றது. ஆகவே இந்த விவகாரம் தொடர்பாக மாணவர்களை தெளிவூட்டுவது மட்டுமன்றி அதற்கான செயற்திறன்மிக்க வேலைத்திட்டங்கள் அவசியம். – என்றார்.

# ஒரு மணிநேர காத்திருப்பின் பின்னர் வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நடுகை

கிளிநொச்சி,ஜன.13

அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த அமைச்சர் சஜித் பிரேமதாசவின் உத்தரவின் பேரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதாக உறுதி அளித்ததன் பிரகாரம் நேற்று கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புரம் பகுதியில் முதல்கட்டமாக ஐம்பது குடும்பங்களுக்கு ஏழு அரை லட்சம் பெறுமதியில் வீடுகளை வழங்குவதற்கு பதினொரு மணியளவில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இந் நிகழ்வுக்கு நடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் , ஆளுநரின் செயலாளர், ,மேலதிக அரசாங்க அதிபர் வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், பயனாளிகள், மக்கள் எனப் பலரும் உரிய நேரத்திற்கு வருகை தந்து காத்திருந்த போதும் வீடமைப்பு அதிகார சபயின் தலைவர் வருகைதர தாமதமானதால் அனைவரும் ஒரு மணித்தியாலம் காத்திருந்தனர். சுமார் பன்னிரண்டு மணியளவில் குறித்த அதிகார சபையின் தலைவர் வருகை தந்ததன் பின்னர் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தகது.



# அங்கஜன் இராமநாதன் தலைமையில் கிளிநொச்சியில் துப்புரவுப் பணிகள்

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பன்னங்கண்டி பிரதேசத்தில் நேற்றைய தினம் அங்கஜன் இராமநாதனை தலைமையாகக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் அணியினரால் துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுக் காலை குறித்த துப்புரவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. பன்னங்கண்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளிட்ட பொது இடங்கள் இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டன.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து இளைஞர், யுவதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை வளாகம், பாடசாலை கட்டடங்களுக்கு வர்ணம் பூசுவதற்கான ஏற்பாடுகளை இதன்போது இளைஞர்கள் முன்னெடுத்தனர். பிரதேச ரீதியாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை இன்று தென்னிலங்கையிலிருந்து நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் இந்தப் பகுதிக்கு வருகை தர உள்ளனர். குறித்த பாடசாலை கட்டடத்திற்கு வர்ணம் பூசி மாணவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் கையளிக்கப்பட உள்ளன எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த ஏற்பாடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மாவட்ட செயலகத்தால் பாடசாலை பொதிகள் கையளிப்பு



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கண்டி மக்களின் பங்களிப்புடன் கண்டி மாவட்ட செயலகம் ரூபா 15 இலட்சம் பெறுமதியான பாடசாலை பொதிகளைக் கையளித்துள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுப் பகல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மாவட்ட செயலகங்கள் ஊடாக உதவிக்கரம் நீட்டும் நோக்குடன் நேற்று கண்டி மாவட்ட செயலகத்தினால் இந்த பொருள்கள் கையளிக்கப்பட்டன.

கண்டி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் இந்தப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலனிடம் கையளிக்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொருள்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

## நாளை

14.01.2019
திங்கட்கிழமை

நட்சத்திரம் : ரேவதி மு.ப 9.26 வரை
திதி : அட்டமி மு.இ 8.33 வரை
சுபநேரம் : 12.34 - 2.04 வரை
இராகுகாலம் : 8.04 - 9.34 வரை

# போதைப்பொருள் தடுப்பு வார நிகழ்வுகளை முல்லையில் தொடக்கி வைக்கிறார் ஜனாதிபதி


ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜன. 13

போதைத்தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் முன்னாயத்த கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி செயலணியின் முதன்மை அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய பொலிஸ் அதிகாரி மஹிந்த குணரத்ன, பிரதேச செயலாளர்கள் , முப்படை அதிகாரிகள், வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

போதைக்கு எதிரான பாடசாலையின் பலம் என்ற தொனிப்பொருளில் நாடுதழுவியரீதியில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை போதைப் பொருள் தடுப்பு நடைமுறைப்படுத்தப் படவுள்ளது இதன் தொடக்க நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் தொடக்கி வைக்கப்படவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பில் சகல அரச திணைக்கள பிரதிநிதிகள் முதன்மை பொலிஸ் அத்தியட்சகர்கள் முப்படைஅதிகாரிகள் உள்ளிட்டவர்களுடனான போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் அதிகாரிகள் கலந்துரையாடி முடிவுகளை எட்டியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பாடசாலையான முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் இரண்டாயிரம் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி தேசிய போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வாரம் தொடக்கி வைக்கப்படவுள்ளது

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் முகவுத்தரத் தேர் பவளக்கால் நடும் விழா

மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் முகவுத்தரத் தேர் பவளக்கால் நடும் விழாவில் அடியார்களை கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீ கந்தசாமி கோவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகவுத்தரத் தேர் பவளக்கால் விழா எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணிமுதல், 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7.30 மணிக்குஸ்நபனாஅபிஷேகமும், 8.30 மணிக்கு விஷேட பூசை ஆராதனைகளும், 10 மணிக்கு பவளக்கால் உள்வீதி திருஊர்வலமும், 10.30 மணிக்கு பவளக்கால் நடும் விழாவும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள தேர்களிலேயே மிகஉயரமான தேராகக் கருதப்படும் மாவிட்டபுரம் கந்தசாமிகோவிலின் முகவுத்தரத் தேரானது, 45 அடி உயரமானதாக ஸ்தபதி கந்தசாமி இளங்கோவன் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அனுமதி மறுக்கப்பட்ட மாணவனுக்கு கிளி. மகா வித்தியாலயத்தில் அனுமதி




கிளிநொச்சி,ஜன.13

இவ்வருடம்தரம் ஆறுக்கு தனது மகனை கிளிநொச்சியில் உள்ள இரண்டு பாடசாலைகளிலும் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவித்து தந்தையொருவர் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ் மனித உரிமைகள் ஆனைக்குழு நேற்று முன்தினம் (11.01.2019) கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரை விசாரணைக்கு அழைத்திருந்தது.

விசாரணையின் நிறைவில் கிளிநொச்சி நகரில் பழைய கச்சேரிக்கு பின்புறமாக வசிக்கின்ற த.குயிலன் என்ற மாணவனுக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அனுமதி வழங்குமாறும் அதுவே நியாயத்தன்மையானது என்றும் தெரிவித்து அந்த மாணவனை எதிர்வரும் 17 ஆம்திகதி பாடசாலையில் சேர்த்துக்கொள்ளுமாறு யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அந்த மாணவன் தரம் ஐந்து வரை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்றவன் என்பது குறிப்பிடத்தக்கது

இதேவேளை யாழ் அச்சுவேலியில் இருந்து கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் க.பொ.த உயர்தரத்திற்கு இணைந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்ட மாணவன் ஒருவனும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாடு கவனத்தில் எடுக்கப்பட்டு மாணவனின் விசாரணை மேற்கொண்ட போது மாணவன் அச்சுவேலியிலிருந்து கிளிநொச்சியில் உள்ள பாடசாலையில் சேர்வதற்காக முன்வைக்கப்பட்ட காரணங்கள் நியாயத்தன்மையற்றவை என்ற காரணத்தினால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அவரின் முறைப்பாட்டை தள்ளுபடி செய்து விட்டது.

## அரசமைப்பு வரைவால் மஹிந்த தரப்பில் குழப்பம்

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு 'Draft' என ஆங்கில மொழியில் இருப்பதாகவும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அவ்வாறு இல்லை என்றும் இதில் ஏதேனும் உள்நோக்கம் உள்ளதா என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் –

நாங்கள் தோற்கவில்லை. சர்வதேசத்தின் கூட்டுச் சதியால் தோற்கடிக்கப்பட்டோம். எனினும், எனது தந்தையின் தலைமையில் மீண்டும் ஆட்சி பீடம் ஏறுவோம்.

பதவி ஆசை பிடித்த இந்த அரசு நிரந்தரமில்லை. பதவி ஆசை பிடித்த இந்தப் பிரதமரும் நிரந்தரமில்லை. அதிகாரப் பகிர்வு என்று கூறி இந்த நாட்டை இந்த அரசு இரண்டாகப் பிளவுபடுத்தப் பார்க்கின்றது. எனினும், பிரதான எதிர்க்கட்சியான நாம் இதற்கு ஒருபோதும் அனுமதியளிக்க மாட்டோம்.

இன்று எதிர்க்கட்சி வரிசையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியுடன் அமர்ந்திருக்கும் நாம், விரைவில் பிரதமர் பதவியுடன் ஆளுங்கட்சி வரிசையில் அமர்வோம். நாட்டு மக்கள் எமது பக்கமே உள்ளனர். நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் இதனை நாம் நிரூபித்துக் காட்டுவோம்.

தேர்தலை இந்த அரசு இழுத்தடித்தால் பெரும்பான்மைப் பலத்துடன் நாம் ஆட்சியமைத்துக் காட்டுவோம். நாட்டை முன்னேற்றிக் காட்டுவோம் என்றார்.

## கள்ளுத்தவறணைக்கு எதிராக மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு முத்துஜயன்கட்டு எல்.பியில் இருந்து வலது கரை நோக்கி செல்லும் வீதியில் மக்கள் குடியிருப்பு பகுதியில் பேராற்று பாலத்திற்கு அண்மையாக அமைந்துள்ள கள்ளுத்தவறணையால் கிராம மக்கள் வசிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்கள்.

இந்த கள்ளுத்தவறணையின் வாடிக்கையாளர்கள் மது அருந்திவிட்டு அருகில் இருக்கும் குடும்பங்களுக்கு தொல்லை கொடுப்பதாக பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு கள்ளுத்தவறணையில் கள்ளை அருந்திய சிலர் அருகில் இருந்த குடிமக்களுக்கு பெரும் இடையூறை விளைவித்துள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த கள்ளுத்தவறணையை அகற்றக் கோரி கிராம மக்கள் நேற்றுமுன்தினம் கள்ளுத்தவறனைபகுதியில் கவனவீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள்.

சம்பவ இடத்துக்கு வந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் மக்களின் கோரிக்கைளை ஏற்றுக்கொண்டு குறித்த கள்ளுத்தவறணையை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவே இனி செயற்படவேண்டும் என்றும் அதுவரை அதனை திறக்க அனுமதி இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

முத்துஜயன்கட்டு வலதுகரை – இடதுகரைக்கான முதன்மை வீதியாக இந்த வீதி காணப்படு



கின்றது. இந்த வீதிக்கு அருகில் கள்ளுத்தவறணை இருப்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடக்கம் பெண்கள் வரையில் மதுப்பிரியர்களின் இம்சைகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள் அதனை விட அருகில் உள்ள வீடுகளுக்கு செல்லும் மதுப்பிரியர்கள் தொல்லை கொடுத்து வருவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

## மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கோரி நீதிமன்றம் செல்ல தயாராகிறார் தயாசிறி

கொழும்பு, ஜன. 13

மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் அதற்கு எதிராக மாகாண முதலமைச்சர் ஒருவரின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினருக்கும், அரசியல் கட்சி அங்கத்தவர்களுக்கும் இடையில் தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் பேச்சு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர இதனை தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தல் நடத்தப்படுவதை துரிதப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சித் தலைவர்களை அறிவுறுத்துவதற்கும் இந்த சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

A/L பொருளியல்
MCQ -① ② & ③
முதல் நான்கு அலகுகளுக்குரியது
33 உப அலகுகள் & விடயத் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது
1280 MCQs
2019 A/L புதிய மாதிரி வினாத்தாள் - அமைப்பு, புள்ளித்திட்டம், நோக்கங்கள், வினாவகைகள், பரீட்சை நுட்பங்கள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல் குறிப்புக்கள் அடங்கியது
2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும்
100/100
பெறவைத்த நூல்களின் ஆசிரியர் - வே.கருணாகரன்
ரூபா 480
* எல்லாப்புகழும் இறைவனுக்கே!
2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்
பூபாலசிங்கம் புத்தகசாலை/ அன்னை புத்தகசாலை

# பா.ஜ.க. இல்லாத இந்தியா தேவையில்லை துபாயில் ராகுல் காந்தி ஆவேசப் பேச்சு

ஐக்கிய அமீரகம்,ஜன.13

இந்தியாவில் கடந்த நான்கரை ஆண்டுகளாகச் சகிப்பின்மை நிலவுவதாகவும் பா.ஜ.க. இல்லாத இந்தியா தேவையில்லை எனவும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மத்திய பாஜக அரசை கடுமையாக விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 2 நாள் பயணமாக ஐக்கிய அரபு அமீரகம் நாட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு துணை ஜனாதிபதி, பிரதமர் ஷேக் முகமது பின் ரஷித் அல் மக்தும் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.



அதன்பின் துபாய் கிரிக்கெட் மைதானத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசுகையில்

“ஐக்கிய அரபு அமீரகம் அரசு இந்த ஆண்டு சகிப்புத்தன்மை ஆண்டாக கடைப்பிடிக்கிறது. ஆனால், இந்தியாவில் கடந்த நான்கரை ஆண்டுகளாகச் சகிப்பின்மை நிலவுகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியர்கள் தங்களின் வியர்வை, இரத்தம், நேரத்தை செலவு செய்து, நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் உதவி வருகின்றனர், அவர்களை நினைத்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

ஆனால், இந்தியாவில் பிரிவினை இருந்தால், ஒருபோதும் வலிமையாக இருக்க முடியாது. அரசியல் காரணங்கள், அரசியல் நலன்களுக்காக என்னுடைய அன்புக்குரிய தேசம் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. பல்வேறு மதங்களாக, சமூகமாக, பணக்காரர்கள், ஏழைகளாகப் பிளவுபடுத்தப்பட்டு இருக்கிறது.

சித்தாந்த ரீதியாக, சிந்தனை ரீதியாக இந்தியாவை மீண்டும் நாங்கள் ஒருங்கிணைக்க விரும்புகிறோம். மக்களையும், மதங்களையும், சமூகத்தையும் மீண்டும் ஒன்றிணைக்கவே நாங்கள் முயன்று வருகிறோம்.

காங்கிரஸ் இல்லாத பாரதம் என்று முழக்கம் வைக்கிறார்கள். ஆனால், எங்களைப் பொறுத்தவரை, பா.ஜ.க. இல்லாத இந்தியா தேவையில்லை. இந்தியா தான் முதலில். அதன்பின்தான் மற்றவை என்று சொல்லும் இந்தியர்களும், இந்தியாவும் தான் வேண்டும்.

கிரிக்கெட்டுக்கும், இந்தியாவுக்கும் ஒற்றுமை இருக்கிறது. பிளவுபட்ட கிரிக்கெட் அணி வெற்றி பெற முடியுமா? அப்படி இருக்கும்போது, பிளவுபட்ட நாடு எவ்வாறு வெற்றி பெற முடியும்?”

எனவும் ராகுல் கேள்வியெழுப்பினார்.

நிலவில் தரைப்பகுதியை ஆய்வு செய்ய

## ஏப்ரலில் விண்ணுக்கு பறக்கும் சந்திரயான்-2

பெங்களூரு ,ஜன.13

நிலவில் தரைப் பகுதியை ஆய்வு செய்ய ‘ரோவர்’ எந்திரத்துடன் சந்திரயான்-2 விண்கலம் ஏப்ரல் மாதம் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் சிவன் கூறியுள்ளார்.

இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தலைவர் சிவன் பெங்களூருவில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நிலவில் தரைப் பகுதியை ஆய்வு செய்ய சந்திரயான்-2 விண்கலம் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதம் விண்ணில் செலுத்த முடிவு செய்திருந்தோம். ஆனால் சில சோதனைகள் இன்னும் முடிவடையாததால், சந்திரயான்-2 விண்கலம் மார்ச் மாதம் 25 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாத இறுதிக்குள் விண்ணில் செலுத்தப்படும். அதில் ரோவர் நகரும் ஆய்வு எந்திரம் பொருத்தப்படும். அந்த வாகனம், நிலவில் தரையில் இறங்கி ஆய்வு செய்யும். அது 500 மீற்றர் சுற்றளவுக்கு



ஆய்வு பணிகளை மேற்கொள்ளும்.

இஸ்ரோ வெளிநாடுகளிலும் தரை கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்க முடிவு செய்துள்ளது. அது ரஷ்யா, ஜப்பான் நாடுகளாக இருக்கலாம். இஸ்ரோ தொலைக்காட்சியை தொடங்க முடிவு செய்துள்ளோம். இதற்கான பூர்வாங்க பணிகள் முடிவடைந்துள்ளன.

பூட்டான் நாடு, தங்கள் நாட்டில் தரைக் கட்டுப்பாட்டு மையத்தை அமைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. ஆதித்யா விண்கலம் 2020 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது சூரியனை ஆய்வு செய்யும். - என்றார்.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு பெருமளவு இளைஞர்கள் முன்பதிவு

அலங்காநல்லூர்,ஜன.13

அலங்காநல்லூரில் வரும் 17 ஆம் திகதி ஜல்லிக்கட்டு நடைபெறுவதையொட்டி மாடுபிடி வீரர்கள் ஆயிரக்கணக்கானோர் திரண்டு முன்பதிவு செய்து வருகின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. அன்றில் இருந்து ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் முழுவீச்சில் செய்து வருகிறது.

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 நாள்களே இருப்பதால் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. 3 இடங்களில் வாடிவாசல், தடுப்பு, கலரி, மைதானம், அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வரும் 17 ஆம் திகதி (வியாழக்கிழமை) நடைபெறுகிறது.

இதில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்களுக்கான முன்பதிவு நேற்று நடந்தது. அலங்காநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த முன்பதிவில் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.



## சபரிமலை புனிதத்தை கெடுத்தவர்கள் ஐயப்பனால் தண்டிக்கப்படுவார்கள்

நடிகர் சுரேஷ் கோபி எச்சரிக்கை

சபரிமலைக்குள் சென்று அதன் புனிதத்தை கெடுத்தவர்கள் ஐயப்பனால் தண்டிக்கப்படுவர் என மலையாள நடிகர் சுரேஷ் கோபி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடும் போராட்டங்களையும் எதிர்ப்பையும் மீறி கடந்த 2ஆம் திகதி கனகதுர்க்கா, பிந்து ஆகிய இரண்டு பெண்கள் சபரிமலைக்குள் சென்று தரிசனம் செய்தனர். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து இந்து அமைப்புகள் உள்ளிட்ட பலர் கேரளாவில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பிரபல மலையாள நடிகரும், பாஜக எம்.பியுமான சுரேஷ் கோபி சபரிமலைக்குள் மாறுவேடம் போட்டுக்கொண்டு உள்ளே சென்றது சரிதானா என மக்கள் முடிவு செய்யட்டும். கோவிலுக்குள் சென்று புனிதத்தை கெடுத்தவர்களை ஐயப்பன் தண்டிப்பான். இந்த மாநில அரசு மாற்றம் என்ற பெயரில் மிகப்பெரிய தப்பை செய்துவிட்டது. விரைவில் அதற்கான பலன்களை அவர்கள் அனுபவிப்பர் எனக் கூறினார்

## கமலின் கட்சியில் சேர ஆசைப்படும் ஷகிலா

சென்னை,ஜன.13

சினிமா நடிகர்கள், நடிகைகள் அரசியல் கட்சியில் சேருவது என்பது சர்வ சாதாரணமான நிகழ்வாக மாறிவிட்டது.

நடிப்பில் கிடைக்கும் புகழை வைத்து அரசியலில் தடம் பதித்து வெற்றி காணலாம் என்ற நம்பிக்கையுடன் பலர் அரசியலில் இறங்கி வருகிறார்கள். நடிகர் கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் என்ற பெயரில் கட்சி ஆரம்பித்து நடத்தி வருகிறார். இந்தக் கட்சியில் நடிகை ஸ்ரீப்ரியா, கவிஞர் சினேகன் உள்பட பல சினிமா பிரபலங்கள் இணைந்துள்ளார்கள். இந்நிலையில் நடிகை சகிலா கமல் கட்சியில் சேர ஆசைப்பட்டுள்ளார். இது தொடர்பாக அண்மையில் அளித்த பேட்டியில் தனது விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

நான் கமல்ஹாசன் ரசிகை. வீட்டில் ஓய்வாக இருக்கும்போது அவருடைய படங்களைத்தான் பார்ப்பேன். கமல்ஹாசன் கட்சியில் சேரவும் ஆர்வம் இருக்கிறது என்றார் ஷகிலா.

## உத்தரபிரதேச தேர்தல் கூட்டணியில் காங்கிரஸை சேர்ப்பதால் இலாபமில்லை

கூறுகிறார் மாயாவதி

புதுடில்லி,ஜன.13

உத்தரபிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டணியில் காங்கிரஸை சேர்ப்பதால் எங்களுக்கு இலாபமில்லை என பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி கூறியுள்ளார்.

வரும் நாடாளுமன்ற தேர்தலில் உத்தர பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சியும், சமாஜ் வாதி கட்சியும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன.

இது தொடர்பாக பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதியும், சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவும் டில்லியில் கூட்டாக நேற்று பேட்டி அளித்தனர்.

இதன்போது பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி கூறுகையில்

எங்களின் இந்த அறிவிப்பு மோடிக்கும், அமித்-ஷாவுக்கும் தூக்கத்தை கலைக்கப்போகிறது. ஏற்கனவே பகுஜன் சமாஜ் கட்சியும், சமாஜ்வாதி கட்சியும் கூட்டணி சேர்ந்து போட்டியிட்டு உள்ளன.





நாட்டின் நலனுக்காக இருவரும் கருத்து வேறுபாடுகளை மறந்து கூட்டணி சேர்ந்து போட்டியிடுகிறோம். மக்களின் மனம் அறிந்து செயல்பட்டால் கூட்டணியை தாண்டி தேர்தலில் வெற்றி பெறுவோம். எங்களது இந்த கூட்டணியை பார்த்து பா.ஜ.க. அஞ்சுகிறது.

மோடி ஆட்சியின் மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். எங்களது கூட்டணியில் காங்கிரஸ் இல்லை. எங்கள் கூட்டணியில் காங்கிரஸை சேர்ப்பதால் எங்களுக்கு எந்த இலாபமும் இல்லை. கடந்தகால தேர்தல்களில் பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜ்வாதி கட்சிக்கு காங்கிரஸ் வாக்கு மாறியது இல்லை. பகுஜன் சமாஜ் கட்சியும் சமாஜ்வாதி கட்சியும் தலா 38 இடங்களில் போட்டியிடுகின்றன. அமேதி, ரேபரேலியில் போட்டியிடவில்லை. மற்ற இரு இடங்கள் மற்ற கட்சிகளுக்காக. என கூறினார்.

# அகதிகள் குழந்தைகள் தங்கும் டெக்சாஸ் காப்பகம் மூடப்பட்டது

டெக்சாஸ், ஜன.13

அமெரிக்காவில் டெக்சாஸ் மாநில குழந்தைகள் காப்பகத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த அகதிகள் குழந்தைகளில், கடைசி குழந்தையும் தற்போது பெற்றோரிடம் அனுப்பி வைக்கப்பட்டதால் காப்பகம் மூடப்படுகிறது.



அமெரிக்காவில் எல்லை வழியாக சட்ட விரோதமாக குடியேறும் அகதிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி டிரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார். கடந்த ஆண்டு அவர் பிறப்பித்த உத்தரவின்படி, மெக்சிக்கோ எல்லை வழியாக வரும் அகதிகளைச் சட்டவிரோத குடியேற்றத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவர்களின் குழந்தைகளை அவர்களிடம் இருந்து பிரித்து டெக்சாஸில் உள்ள டோர்னில்லோ காப்பகத்தில் தங்க வைத்தனர். சுமார் 6,200 குழந்தைகள் காப்பகத்தில் வைக்கப்பட்டனர்.

அமெரிக்க சட்டப்படி சட்டவிரோத குடியேற்றத்தில் குழந்தைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதால், குழந்தைகள், பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டன. ஆனால் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, சட்ட விரோதமாக நுழையும் அகதிகளிடம் இருந்து அவர்களின் குழந்தைகளை பிரித்து காப்பகத்தில் தங்கவைக்கும் திட்டத்தை ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ரத்து செய்தார்.

அதன்பின்னர் காப்பகத்தில் உள்ள குழந்தைகளை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் பணி தொடங்கியது. படிப்படியாக குழந்தைகள் அவர்களின் பெற்றோர்கள் இருக்கும் முகாம்களில் ஒப்படைக்கப்பட்டனர். இந்த பணி தற்போது முடிவடைந்துள்ளது. கடைசி குழந்தையும் டோர்னில்லோ காப்பகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் வில் ஹர்ட் உறுதி செய்துள்ளார்.

இந்த காப்பகம் மூடப்பட்டாலும், பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் இன்றி அகதிகள் குழந்தைகள் வந்தால், அவர்களை தங்கவைப்பதற்கு இங்குள்ள முகாம் போன்ற வசதிகள் அவசியம் தேவைப்படும் என குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கான சுகாதார மற்றும் மனித சேவைகள் நிர்வாகத்தின் துணை செயலாளர் லின் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

# அமெ. அவசரகால நிலையை அறிவிக்கமாட்டாராம் ட்ரம்ப்



வொஷிங்டன், ஜன.13

அமெரிக்காவில் தற்போது அவசரகால பிரகடனத்தை அறிவிக்கப்போவதில்லை என ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 நாள்களாக அமெரிக்க அரசாங்கம் பகுதியளவு முடங்கியுள்ளது. இதனால், சுமார் எட்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஊதியம் பெறாமல் உள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் தற்போதைக்கு அவசரகால பிரகடனம் அறிவிக்க போவதில்லை என்று ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார். அவசர நிலையை பிரகடனப்படுத்துவதற்கு எனக்கு எல்லா உரிமையும் உண்டு

எதிர்க்கட்சியினருக்கு ஆதரவாக ஊடகங்கள் செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார். அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களால் ஏற்படும் உயிரிழப்புகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர ஊடகங்கள் மறுப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

தம்மை இழிவுபடுத்தி, தேர்தல் வெற்றியை தேடும் எதிர்க்கட்சியினரை கண்டுகொள்ளப் போவதில்லை என்று தெரிவித்த டிரம்ப், அமெரிக்க - மெக்சிக்கோ எல்லை சுவருக்கான நிதியே நாட்டுக்கு முக்கியமானது - என்றார்.

# நவாஸ் ஷெரீப் உடல் நிலை மோசம் மருத்துவர்களுக்கும் அனுமதி மறுப்பு

## மகள் மர்யம் நவாஸ் குற்றச்சாட்டு

லாகூர், ஜன.13

அல்-அஸிஸியா இரும்பு ஆலை ஊழல் வழக்கில் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், லாகூரில் உள்ள கோட் லக்பத் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் உள்ள அவருக்கு உடல் நலம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், மருத்துவர்களை அனுமதிக்க சிறை நிர்வாகம் அனுமதி மறுப்பதாகவும் அவரது மகள் மர்யம் நவாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

மர்யம் நவாஸ் தனது டுவிட்டரில் இது குறித்து கூறியிருப்பதாவது:-

நவாஸ் ஷெரீப்புக்கு கையில் வலி ஏற்பட்டுள்ளது. இது ஆன்ஜினா(இதய நோய்)வாக இருக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இதய மருத்துவ நிபுணர்கள் நவாஸ் ஷெரீப்பை சந்திக்க முயற்சித்தனர். ஆனால், அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என தெரிவித்து இருந்தார்.

ஆனால், மர்யம் நவாஸ் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள சிறைத்துறை மருத்துவர்கள், நவாஸ் ஷெரீபின் உடல் நலம் சீராக உள்ளது. அவரது உடல் முழுவதும் பரிசோதனை செய்யப்பட்டது. அவர் நல்ல உடல்நலத்துடன் உள்ளார் என்று தெரிவித்துள்ளனர். 69 வயதான நவாஸ் ஷெரீப், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் இதய அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் சிறைக்கு சென்று தனது தந்தையை பார்த்துவிட்டு வந்த மர்யம் நவாஸ், தனது தந்தைக்கு மருத்துவ ரீதியாக மிகவும் தீவிர பிரச்சினைகள் இருக்கின்றன எனவும், சிறப்பான மருத்துவ வசதிகள் அவருக்கு தேவைப்படுகின்றன எனவும் செய்தியாளர்களுக்கு பேட்டியும் அளித்து இருந்தார்.

# சிரியாவில் நிலை கொண்டிருந்த அமெ. படைகள் வெளியேற்றம்

சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற தொடங்கி விட்டன என அமெரிக்க கூட்டுப்படைகளின் செய்தித் தொடர்பாளர் சீன் ரியான் தெரிவித்தார்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்கு அமெரிக்கப் படைகள் சிரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு முதல்முறையாக அப்போதைய ஜனாதிபதி ஒபாமாவின் உத்தரவின் பேரில் அமெரிக்க வீரர்கள் சிரியா சென்றனர்.

அவர்கள் அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து வான்தாக்குதல்கள் நடத்தி, பல நகரங்களை அவர்களிடம் இருந்து மீட்டனர். அமெரிக்கப் படைகள் வருகைக்குப் பிறகு அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் பெருத்த பின்னடைவை சந்தித்தனர்.

இந்தநிலையில் யாரும் எதிர்பாராத வகையில், சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார் எனவும், எனவே அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படுகின்றன எனவும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், கடந்த மாத இறுதியில் அதிரடியாக அறிவித்தார்.

இந்த விவகாரத்தில் டிரம்ப் உடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் ஜிம் மேட்டிஸ் பதவி விலகினார். மேலும் பிரான்ஸ் உள்ளிட்ட நட்பு நாடுகள் டிரம்ப் தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வலியுறுத்தின.

அதனைத் தொடர்ந்து, சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளை உடனடியாக திரும்பப் பெறப்போவதில்லை என்று டிரம்ப் அண்மையில் அறிவித்தார்.

ஆனால் சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற தொடங்கி விட்டன என அமெரிக்க கூட்டுப்படைகளின் செய்தித் தொடர்பாளர் சீன் ரியான் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், சிரியாவில் இருந்து அமெரிக்க வீரர்கள் தங்களுடைய நாட்டுக்கு திரும்பத் தொடங்கி இருக்கிறார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளை தவிர வேறு எந்த விஷயங்கள் குறித்தும் நாங்கள் ஆலோசிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# பூமியின் வட காந்த முனையில் ஏற்பட்டுள்ள விரைவான மாற்றம்

## ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

பூமியின் வட காந்த முனையில் விரைவான மாற்றம் அடைந்து வருகிறது திசைகாட்டும் கருவியில் புதிய மாற்றங்கள் அவசியம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

பூமியின் வடக்கு காந்த துருவத்தில் விரைவான மாற்றங்கள் நடைபெற்று வருகிறது. இதனால் ஆர்ட்டிக்கில் கப்பல்கள், விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் வழிநடத்துவதற்கு உதவுகின்ற திசைகாட்டியில் ஒரு முன்மாதிரியான முன்னோடித்தனமான ஆரம்ப மேம்படுத்தலை உருவாக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கட்டாயப்படுத்தி வருகின்றனர் என விஞ்ஞானிகள் கூறினர்.

வட காந்த முனை நோக்கித் திசைகாட்டி ஊசி புள்ளிகள் உள்ளன. வடகிழக்கு கனடாவின் கடற்கரையிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஆர்க்டிக் பெருங்கடலின் நடுவில் இருந்து கணிக்க முடியாத ஒரு புள்ளி ரஷ்யா நோக்கிச் செல்கிறது.

அது சுமார் 50 கிமீ (30 மைல்) ஒரு வருடத்தில் நகரும். அது 1900 மற்றும் 1980 க்கு இடையில் மிக அதிகமாக நகரவில்லை, ஆனால் கடந்த 40 ஆண்டுகளில் அது உண்மையில் அதிக வேகம் காட்டுகிறது என எடின்போர்க் நகரின் பிரிட்டிஷ் புவியியல் ஆய்வு மையத்தை சேர்ந்த சியாரன் பேகன், கூறி உள்ளார்.

2020 ஆம் ஆண்டில் ஒரு உலக காந்த திசை வழிகாட்டி மாதிரியின் ஐந்து வருடகால புதுப்பிப்பு நடைபெறும். ஆனால் அமெரிக்க இராணுவம் முன்னெப்போதும் இல்லாத ஒரு ஆரம்ப மதிப்பீட்டைக் கோரி உள்ளது. BGS உடன் இணைந்து அமெரிக்க தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்துடன் இந்த மாதிரியை உருவாக்குகிறது.

நேட்டோவும், அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் இராணுவமும் காந்த மாதிரியைப் பயன்படுத்துபவர்களிடையே உள்ளனர். முக்கியமாக கனடாவின் வடக்கே ஆர்க்டிக் பெருங்கடலில் நகரும் துருவத்தை வழிநடத்துகிறது.

பூமியின் உள்ளே ஆழமான திரவ இரும்புகளில் எதிர்பாராத மாற்றங்களால் உருவாகும் காந்த துருவ முனை இயக்கப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட திசைகாட்டி மாதிரி ஜனவரி 30 அன்று ஒரு மேம்படுத்தல் வெளியிடப்படும் என நேச்சர் பத்திரிகை கூறி உள்ளது. ஜனவரி 15 முதல் அமெரிக்க அரச பணிநிறுத்தம் காரணமாக இது தாமதமாகி வருகிறது.

துருவ மாற்றம் வேகமாக நடந்து வருவதால், இந்த பிராந்தியத்தில் பெரிய தவறுகள் நடக்கிறது என கொலராடோ போல்டர் மற்றும் ஹிநுபுபு இன் தேசிய மையங்கள் சுற்றுச்சூழல் தகவல் பற்றிய புவியியலாளர் ஆர்னாட் சல்லியட் நேச்சுரல் பத்திரிகையில் தெரிவித்து உள்ளார்.

வடக்கு காந்தத் துருவத்தில் சமீபத்திய மாற்றங்கள் ஆர்க்டிக்கிற்கு வெளியே உதாரணமாக நியூயோர்க், பீஜிங் அல்லது லண்டனில் பெரும்பாலான மக்களால் கவனிக்கப்படாமல் இருக்கும். அது உண்மையில் நடுப்பகுதி அல்லது குறைந்த அட்சரேகைகளை பாதிக்காது, யாரோ ஒரு காரை ஓட்டிச் செல்வதை உண்மையில் அது பாதிக்காது என பேகன் தெரிவித்துள்ளார்.

பல ஸ்மார்ட்போன்கள், போகாமன் கோ போன்ற வரைபடங்களை அல்லது விளையாட்டுகளை நோக்குவதற்கு உதவும் உள்ளமைக்கப்பட்ட திசைகாட்டிகளைக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் பெரும்பாலான இடங்களில், திசைகாட்டி ஐந்து ஆண்டு மாதிரிகளில் அனுமதிக்கப்படும் பிழைகளை மட்டுமே சுட்டிக்காட்டும், என பேகன் கூறியுள்ளார்.

### கொடுப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி

நம் வாழ்வைப் பகிரும்பொருட்டு இறைவன் மனிதனாகப் பிறந்தார். நாம் இந்த உறவை கொடுப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியை இறைவனுடனும் நம் ஒவ்வொருவருடனும் உயிரோட்டமாக வைத்திருப்போம். திருக்காட்சித் திருவிழாவையொட்டிய செய்தியில் திருத்தந்தை கீழ்த்திசையின் மூன்று ஞானிகள் இயேசுவுக்கு மிக உயரிய கொடைகளை வழங்கினார்கள். கொடுப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியை கண்டு கொள்ள உதவுமாறு இறைவனிடம் வேண்டுவோம் என்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### மகாகல்கமுவ யோசவ் வாஸ் தேசிய யாத்திரைத்தலத்தில் யாழ் ஆயர்

குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகையின் அழைப்பில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மகாகல்கமுவ புனித யோசவ் வாஸ் தேசிய யாத்திரைத்தலத்தில் 15 ஜனவரி 2019 அன்று நடைபெறுகின்ற வருடாந்த பெருவிழாவில் கலந்து கொள்கிறார்.

# முதியோர் மகிழ்வுடன் வாழ்ந்துவரும் கோப்பாய் லில்லி நலவாழ்வு இல்லம்





152 பருத்தித்துறை வீதி கோப்பாயில் தெற்கில் நவீன வசதிகளுடன் வெளிநாட்டு அமைப்பில் அழகுற அமைக்கப்பட்டுள்ளலில்லிநலவாழ்வு இல்லத்தை (லில்லி கெயா கோம்) யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 15 ஜனவரி 2018 அன்று திறந்து வைத்து ஓர் ஆண்டு நிறைவாகியுள்ள நிலையில் இதன் இரண்டாம் கட்டப் பணி நிறைவாகியுள்ளது.

யாழ் சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கை (சன் சுவான் கோவில்) சேர்ந்த அமரர்களான திரு திருமதி தேவசகாயம் மேரி கிறேஸ் லில்லி தம்பதியினரின் ஞாபகமாக பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அவர்களின் மகன் சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் என்பவரை நிறுவன உரிமையாளராகக் கொண்ட லில்லி நலவாழ்வு இல்லத்தின் அடுத்த கட்டம் உரிமையாளரின் மகனின் பெயரில் தோமா அப்பாட்மென்ஸ் என திறந்து வைக்கப்படவுள்ளது.

15 ஜனவரி 2019 அன்று மாலை 4 மணிக்கு யாழ் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி அதிபர் கலாநிதி ரீ.ஜே. கிருபாகரன் அடிகளார் ஆசீர்வதிக்க உரிமையாளர் சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் அவர்களின் துணைவியாரான பிரெஞ் பெண்மணி கிறிஸ்ரின் சாள்ஸ் திறந்துவைப்பார். அடுத்த கட்டம் உரிமையாளரின் மகளின் பெயரில் கிளறா அப்பாட்மென்ஸ் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த தோமா அப்பாட்மென்ஸ் நான்கு மேல் மாடி இல்லங்களையும் நான்கு கீழ் மாடி இல்லங்களையும் கொண்டிருக்கும். கீழ் மாடி இல்லத்தில் கணவன் மனைவி என முதிய பெற்றோர் தங்கியிருக்க மேல் மாடி இல்லத்தில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தங்கியிருக்கலாம் என்பதே நோக்கமாகும். யாழ் ஆயரை காப்பாளராகக் கொண்ட மேற்படி லில்லி நலவாழ்வு இல்லம் கட்டிட மற்றும் நிர்வாகப்பணிகளை யாழ் அமலமரித் தியாகிகள் சபைசமூக அபிவிருத்திப்பணி ஆலோசகர் ஏ.ஜீவாபோல் அ.ம.தி. அடிகளார் மேற்பார்வையிட்டு நடத்திக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

குளிரூட்டப்பட்ட அறைகள்–வைபை மற்றும் தொலைக்காட்சி வசதி – அமைதியாக இளைப்பாறக்கூடிய அழகிய அறைகள் – சுகாதாரமான சுற்றுச்சூழல் – மெல்லிய காற்று எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் இயற்கை மூலிகைத்ஹி தோட்டம் – பூமரங்களும் பழ மரங்களும் நிறைந்த குளிர்மை என லில்லி நலவாழ்வு இல்லத்தை வர்ணித்துக் கொண்டே போகலாம். லில்லி நலவாழ்வு இல்லத்தின் உள்ளேயே வளர்த்தெடுக்கப்பட்ட மரக்கறி மற்றும் பழவகைகள் ஊர்க்கோழி முட்டை என்பன ஆரோக்கியமான உணவைப்பெற வழிசெய்கின்றன.

தொடர்புகளுக்கு தொலைபேசி 0212232262வெப்சைட் lilycarehome.com.

## உண்மையின் எண்ணங்கள்

### கோப்பாய் லில்லி நலவாழ்வு இல்லம்

3 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரும் வெளியில் நல்ல விளைச்சலுக்குரிய செம்மண் மற்றும் வற்றாத இனிய குடி தண்ணீர் கொண்ட கோப்பாய் மண்ணில் 30 அறைகளுடன் ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போன்று அனைத்து நவீன வசதிகளும் கொண்டதாக லில்லி நலவாழ்வு இல்லத்தை அமைத்துள்ள சாள்ஸ் அழகறட்ணம் தேவசகாயம் பாராட்டப்பட வேண்டியவர்.

காசு உழைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தை முற்று முழுதாக கொண்டிராமல் எல்லோரும் முதிய பெற்றோர்களை பராமரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வாழ்வைக் கொண்டாட என்ற விருது வாக்குடன் முதியோரின் நலன்களைக் கவனிக்க 152 பருத்தித்துறை வீதி கோப்பாய் தெற்கில் அமைக்கப்பட்டு சிறப்புற இயங்கி வரும் லில்லி நலவாழ்வு இல்லம் (லில்லி கெயா கோம்) யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒரு புதிய முயற்சியாகும். இதற்காக செலவு செய்யப்பட்ட அடிப்படை பணத்தை பெற நீண்டகாலம் தேவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.

இந்த மண் எங்களின் சொந்த மண் – நமது பெற்றோர் வாழ்ந்த பூமி – நமது மூதாதையரின் வாழ்விடம் என்ற எண்ணங்களுடன் வாழும் முதிய பெற்றோரை இங்கேயே வைத்து பராமரிக்க சிறந்த இடம் லில்லி நலவாழ்வு இல்லம்.

# நோர்வே நாட்டின் பிரதி மேயர் மட்டு. கரித்தாஸ் எகெட் வருகை



நோர்வே நாட்டின் பிரதி மேயர் கம்சி குணரெட்ணம் அவர்கள் அண்மையில் மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தார். இவருடன் சாமினி மற்றும் சாரா அபயரட்ண ஆகியோரும் வருகை தந்திருந்தனர். கரித்தாஸ் நோர்வே மற்றும் நொராட் ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் கரித்தாஸ் எகெட் நடைமுறைப்படுத்தி வரும் மதங்களுக்கிடையிலான நல்லிணக்க செயற்பாடு மற்றும் வறுமைக்கான காரணங்களைக் கவனத்தில் கொள்ளலும் விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தலும் ஆகிய இரு செயற்றிட்டங்களையும் பற்றிய விளக்கங்கள் பல் ஊடகப் பகிர்வின் ஊடாக தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவக இயக்குநர் அருட்தந்தை ஜி.அலக்ஸ்றொபட் அடிகளார், பல்சமய ஒன்றியங்களின் தலைவர்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர்.

# சில்லாலைப் பங்கில் பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்கள்



சில்லாலைப் பங்கில் பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்களை ஏற்படுத்தும் நிகழ்வு யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. திருமதி தமயந்தி ஜோய் சுரேந்திரன் – சவரிமுத்து ஜெராட் கிறகறீஸ் சுசிந்திரராசா – அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்களாக அபிசேகம் செய்யப்பட்டனர். பங்குத்தந்தை ஏ.அகஸ்ரின் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வின் நிறைவில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பங்குமக்களை சந்தித்து உரையாடினார்.

# கச்சான் செய்கைக்கு வாங்கப்பட்ட காணியில் தொடர்ச்சியாக இடம்பெறும் மண் அகழ்வு

## வவுனியா தரணிக்குளம் மக்கள் கடும் விசனம்



மக்கள் வாழும் குடியிருப்பு பகுதியிலிருந்து மணல் அகழ்வதற்கு வவுனியா, தரணிக்குளம் புதிய கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

யுத்தம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களை 1997 ஆம் ஆண்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தரணிக்குளம் கிராமத்தில் குடியேற்றியிருந்தார்கள். அக் கிராமத்தின் உப குடும்பங்களுக்கும், மேலும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டு தரணிக்குளம் புதிய கிராமத்தில் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

தரணிக்குளம் புதிய கிராமத்தில் சுமார் 700 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அக் கிராமத்தின் நடுவே மக்கள் வாழும் பகுதியில் உள்ள காணிகளில் இருந்து தினமும் பல டிப்பர்களில் மண் அகழப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள மக்களது காணிகளுக்கு இன்னமும் அரசாங்கத்தால் காணி உறுதிகள் வழங்கப்படாத நிலையில் மக்களுக்கு சொந்தமான சில காணிகளை மதபோதகர் ஒருவர் சிறிய தொகைப் பணம் கொடுத்து பெற்றிருந்தார். அக் காணிகளில் கச்சான் செய்கை மேற்கொள்ளப்பட்டு அக் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கப்போவதாகவும் தெரிவித்தே காணிகளைப் பெற்றிருந்தார்.

இதனடிப்படையிலேயே அப்பகுதியில் சில காணிகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனால் இன்று 3 வருடங்கள் கடந்தும் கச்சான் உற்பத்திக்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது அந்தக் காணியில் மண் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

மக்கள் வாழும் பகுதியில் தினமும் 10 இற்கும் மேற்பட்ட டிப்பர்கள் மண்ணை அகழ்ந்து செல்வதால் அப்பகுதியில் பெரிய குழிகள் உருவாகி வருவதுடன், அருகில் உள்ள மக்களது வாழிடங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

டிப்பர்கள் தினமும் பயணங்களை மேற்கொள்வதால் வீதிகளும் பயன்படுத்த முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதன்காரணமாக இக்கிராம மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் மண் அகழ்வை நிறுத்தி தமது கிராமத்தை பாதுகாக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் து.நடராஜசிங்கத்திடம் கேட்டபோது, குறித்த மண் அகழ்வுக்கு மத்திய அரசாங்கத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த அகழ்வு முடிவடைந்ததும் பிரதேச சபையால் மக்களது வீதிகள் புனரமைத்துக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## சடலங்களைத் தகனம் செய்ய அறவிடப்படவுள்ளது கட்டணம்

வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள இந்து மயானங்களில் சடலங்களைத் தகனம் செய்வதற்குக் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

ஒரு சடலம் தகனம் செய்வதற்கு ஜனவரி மாதத்திலிருந்து ரூபா ஆயிரம் வரி அறவிடப்பட வேண்டுமென்று பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 14 இந்து மயானங்கள் உள்ள நிலையில். ஒரேயொரு மயானத்தில் மட்டும் சடலத்தை தகனம் செய்வதற்குப் பிரதேச சபையால் பணம் அறவிடப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள பெரும்பாலான மயானங்கள் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமையினால் காடு போல் காட்சியளிக்கின்றன. அத்துடன் மழை காலங்களில் எரி கொட்டகை இல்லாததனால் சடலங்களைத் தகனம் செய்வதில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

இந்நிலை குறித்துப் பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டிய பொது மக்கள் மயானங்களை அபிவிருத்தி செய்து தருமாறு கோரியிருந்தனர்.

இதற்கமைய மயானங்கள் பல இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதையடுத்து பிரதேச சபையின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஆயிரம் ரூபா வரி அறவிடப்பட வேண்டுமென சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் சீமெந்து கல் விற்பனையில் இராணுவம்



முல்லைத்தீவு, முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தை ஆக்கிரமித்து முகாம் அமைத்து நிலைகொண்டுள்ள 59 ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் வீடு கட்டுவதற்குப் பயன்படும் சீமெந்து கற்களை தயாரித்து விற்பனை செய்யும் தொழில் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்த இராணுவ முகாமுக்கு வெளியே கல் விற்பனை விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதுடன், தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து கற்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பில் மக்கள் செய்து வரும் பல்வேறு தொழில்களையும் இராணுவத்தினர் செய்து வருகின்றனர். விவசாயம், பால் பதனிடும் நிலையம், மீன்பிடி, சிறு உணவகம், பெரியளவிலான ஹோட்டல் ஆகிய தொழிற்றுறைகளை இராணுவம் ஏற்கனவே நடத்தி வருகின்றது.

இந்நிலையில் மக்களின் குடிசைக் கைத்தொழிலாக இருந்து வரும் கற்கள் அரிந்து விற்பனை செய்யும் தொழிலையும் இராணுவம் கையிலெடுத்திருக்கின்றமையானது மக்களின் எஞ்சியிருக்கின்ற தொழில் முயற்சிகளையும் அபகரிக்கும் நோக்கம் கொண்டது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

## நாய்களில் பரவும் ஒருவகை நோய் இலங்கையிலும் கண்டுபிடிப்பு



செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்களில் பரவக் கூடிய ஒருவகை நோய் முதன்முதலாக இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் தென்னாபிரிக்க நாடுகளில் பரவலாக இருக்கிறது. இது மனிதர்களுக்கும் தொற்றக்கூடியது என்பதை பேராதனை பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நோய் பாரதூரமானது அல்ல. எனினும் இதன்மூலம் தோலில் பாதிப்பு ஏற்படக் கூடுமென பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் அசோக்க தங்கொல்ல தெரிவித்தார்.

கண் நோயால் பாதிக்கப்பட்ட செல்லப் பிராணி பேராதனை கால்நடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அந்த செல்லப் பிராணியை சோதித்த போது அதற்கு ட்ரை – பென சோமா (Trypanosoma) என்ற நோய் ஏற்பட்டிருந்தமை தெரிய வந்ததாக பேராசிரியர் தங்கொல்ல குறிப்பிட்டார்

## இராணுவம் வெளியேறியதை அடுத்து அபிவிருத்தி செய்யப்படுகிறது மயானம்

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மாதகல் முதலாம் வட்டாரத்திலுள்ள போதிமயானக் காணியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மயானத்தை விட்டு வெளியேறியுள்ளனர். இதையடுத்து மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

மயானத்தின் ஒரு பகுதியில் பல வருடங்களாக நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் பிரதேச சபையைக் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் இராணுவத்தினர் கடந்த வாரம் மயானத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

இதையடுத்து அப்பகுதி மக்களின் நலன் கருதி மேற்படி மயானத்தை அபிவிருத்தி செய்யுமாறு முதலாம் வட்டார உறுப்பினர் திருமதி சிவனேஸ்வரி தவிசாளரைக் கோரியதைத் தொடர்ந்து மயானம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

## ஹற்றனில் லொறி – பஸ் மோதல் சாரதி உட்பட இருவர் காயம்



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியில் டிக்கோயா வனராஜா பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் லொறியில் சென்ற இருவர் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்றும் ஹற்றன் பகுதியில் இருந்து நோர்வூட் பகுதிக்கு வர்த்தகத்திற்காக சென்று கொண்டிருந்த லொறி ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

விபத்தில் லொறியின் சாரதியும், உதவியாளரும் காயமடைந்தனர். இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் நோர்வூட் பொகவந்தலாவை ,மஸ்கெலியா காசல்ரீ உள்ளிட்ட வீதி ஊடான போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகின.

பஸ் சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த முடியாது போனதால் இவ்விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## எரிபொருள் விலை குறைந்தாலும் பேருந்து கட்டணம் குறையாது

எரிபொருள் விலை 2 ரூபாவால் குறைந்தமைக்காக பஸ் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்தப் போவதில்லையெனவும், தொடர்ந்தும் விலை குறையுமாக இருந்தால் கட்டணத்தைக் குறைக்க முடியும் எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்ஜன பிரியன்ஜித் தெரிவித்துள்ளார்.

டீசல் விலை குறைப்புடன் பஸ் கட்டணம் தொடர்பில் கருத்துக்கள் மேலெழுந்துள்ளதாகவும், இன்னும் கட்டணக் குறைப்பு இடம்பெறாமல் பஸ் கட்டணத்தில் மாற்றம் செய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2 ரூபா குறைப்பு பஸ் கட்டணத்தில் மாற்றம் செய்வதற்கு போதுமானது அல்லவென அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அறிவித்துள்ளார்.

முதலாவது ஒருநாள் போட்டியில்

# ஆஸ்திரேலியாவிடம் வீழ்ந்தது இந்தியா



இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போடடியில் ஆஸ்திரேலிய அணி 34 ஒட்டங்களால் வெற்றி பெற்றது.சிட்னியில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.அவ் வணி சார்பாக ஹரே,ஆரோன் பிஞ்ச் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களம் புகுந்தனர்.

எனினும் அணி 08 ஓட்டங்களைப் றெற வேளை பிஞ்சின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.பின்னர் ஹரேயுடன் இணைந்த கவாஜா, அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்.எனினும் ஹரே 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஷோன் மார்ஷ் ,கவாஜாவுடன் இணைந்து ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார்.இந்த நிலையில் அரைச்சதம் கடந்த கவாஜா(59) விக்கெட் வீழ்த்தப்பட்டது.பின்னர் வந்த ஹான்ஸ் கோம்ப் சிறப்பாக செயற்பட் அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.இதேவேளை 54 ஓட்டங்களை பெற்றிருந்த ஷோன் மார்ஷ் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஸ்ரோனிஸ் இந்தியப் பந்து வீச்சை திணறடிக்க இறுதியிவ் ஆஸி அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரோனிஸ்



ஆட்டமிழக்காமல் 47,ஹான்ஸ்கோம்ப் 73 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய பந்து வீச்சில் புவனேஸ்குமார்,குல்தீவ் யாதவ் இருவரும் தலா 02 விக்கெட்டுக்களையும்,ஜடேஜா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 289 எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய இந்திய அணிக்கு அதிர்ச்சியை கொடுத்தனர்ஆஸி பந்து வீச்சாளர்கள் பெகர்டோவ்,மற்றும் றிச்சட்சன். இவர்களின் விக்கெட் வேட்டையால் இந்திய அணி 04 ஓட்டங்களுக்குள் முக்கிய மூன்று விக்கெட்டுக்களை இழந்து திணறியது. தவான் 0,கோஹ்லி 03,அம்பதி ராயுடு 0 என விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது.

பின்னர் ரோகித் சர்மாவுடன் டோனி இணைந்தார். இவர்கள் இருவரும் அணியை சரிவிலிருந்து மீட்டக போரிட்டனர்.32.2 ஆவது ஓவரில் டோனி 51ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார். எனினும் தனித்து நின்று போராடிய ரோகித் சர்மா சதமடித்தார்.இறுதியில் இந்திய அணி 09 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களைால் தோல்வியடைந்தது.

ரோகித் சர்மா 133,டோனி 51,புவனேஸ்குமார் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் றிச்சட்சன் 04,பெகர்டோவ்,ஸ்ரோனிஸ் இருவரும் தலா 02,பீற்றர் சிடில் 01 விக்கெட்டை வீழ்த்தினர்.

# பாகிஸ்தானுடன் ஒருநாள் தொடர் தென்னாபிரிக்க அணி அறிவிப்பு



ஜோகனஸ்பேர்க்,ஜன.13

பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் முதல் இரண்டு போட்டிகளுக்குமான 14 பேர் கொண்ட குழாம் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தேர்வுக் குழுவின் தலைவர் லின்டா ஷொன்டியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி தமது சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணியுடன் மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று ரி 20 போட்டிகள் கொண்ட மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடுகின்றது.

இச்சுற்றுப்பயணத்தின் முதல் தொடரான டெஸ்ட் தொடர் தற்சமயம் நடைபெற்று வருகின்றது. முதல் இரண்டு போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் தென்னாபிரிக்க அணி 2-0 எனும் அடிப்படையில் தொடரை தன்வசப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அடுத்த தொடரான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான முதல் இரண்டு போட்டிகளுக்குமான 14 பேர் கொண்ட குழாமை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வெளியிட்டிருந்தது.

பாப்டுபிளஸிஸ் தலைமையிலான அணியில் ஹஷிம் அம்லா, குயின்டன் டி கொக், ரீஸா ஹென்றிக்ஸ், இம்ரான் தாஹிர், ஹென்ரிச் கிலாசன், டேவிட் மில்லர், டேன் பெட்டர்சன், அன்டில் பெஹலுக்வாயோ, டுவைன் பிடோரியஸ், ககிஸோ ரபாடா, தப்ரிஷ் ம்ஷி, டேல் ஸ்டைன் மற்றும் றைஸ் வென்டர் டைஸன் ஆகியோர் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி போர்ட் எலிசபெத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. இந்த போட்டியானது இலங்கை நேரப்படி மாலை 02.30 மணிக்கு ஆரம்பமாகும்.

**போட்டி அட்டவணை**

**19 ஜனவரி -** முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி - போர்ட் எலிசபெத் (பகலிரவு)

**22 ஜனவரி-** இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டி - டேர்பன் (பகலிரவு)

**25 ஜனவரி -** மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டி - செஞ்சூரியன் (பகலிரவு)

**27 ஜனவரி -** நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டி - ஜொஹனர்ஸ்பேர்க் (பகல்)

**30 ஜனவரி -** ஐந்தாவது ஒருநாள் சர்வதேச போட்டி - கேப்டவுண் (பகலிரவு)

# டோனி 10000




சிட்னி,ஜன.13

ஒருநாள் போட்டியில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 5 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார் மகேந்திர சிங் டோனி .

இந்தியா-ஆஸ்திரேலியா மோதும் முதலாவது ஒரு நாள் போட்டி சிட்னியில் நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் டோனி 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். டோனி இந்த போட்டியில் முதல் ஓட்டத்தை எடுத்தபோது, ஒருநாள் போட்டிகளில் இந்தியாவுக்காக 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் ஒருநாள் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 5 வது இந்திய வீரர் டோனி ஆவார். இதற்கு முன் சச்சின் டெண்டுல்கர், கங்குலி, டிராவிட், கோஹ்லி ஆகியோர் கடந்து உள்ளனர்.

நடப்பு வருடமுதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்போர்னில் தொடங்குகிறது

மெல்போர்ன்,ஜன,13

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுகிறார். அதேவேளையில் சுவிட்சர் லாந்தின் ரோஜர் பெடரர் தனது முதல் சுற்றில் உஸ்பெகிஸ்தானின் இஸ்தோமினை சந்திக்கிறார்.

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்தி ரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் வரும் 14 ஆம் திகதி மெல்போர்ன் நகரில் தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டது. இதில் 7 ஆவது முறையாக பட்டம் வெல்லும் முனைப்புடன் உள்ள முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், முதல் சுற்றில் தகுதி சுற்றில் வெற்றி பெறும் வீரருடன் மோதுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோகோவிச், 2 ஆவது சுற்றில் பிரான்சின் சோங்காவுடன் மோதக் கூடும். நடப்பு சாம்பியனான சுவிட் சர்லாந்தின் ரோஜர் பெடரருக்கு போட்டித் தரவரிசையில் 3 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. அவர், தனது முதல் சுற்றில் 99 ஆம் நிலை வீரரான உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்தோமினுடன் மோதுகிறார். பெடரர் அரை இறுதியில் ஸ்பெயினின் ரபேல் நடாலுடன் மோத வாய்ப்பு உள்ளது.

போட்டித் தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள ரபேல் நடால் தனது முதல் சுற்றில் 238 ஆம் நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்துடன் மோதுகிறார்.

4 ஆம் நிலை வீரரான ஜேர்மனி யின் அலெக் சாண்டர் ஜிவெரேவ், சுலோவேனியாவின் அல்ஜாஸ் பெடனையும், கடந்த முறை 2 ஆவது இடம் பிடித்த குரோஷியாவின் மரிச் சிலிச், ஆஸ்திரேலியாவின் பெர்னார்டு டாமிக்குடனும் தங் களது முதல் சுற்றில் மோதுகின் றனர். 3 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே தனது முதல் சுற்றில் 22 ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ராபர்ட்டோ பவுதிஸ்டா அகுட்டை சந்திக்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லி யம்ஸுக்கு போட்டித் தரவரிசையில் 16 ஆவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் தனது முதல் சுற்றில் ஜெர்மனியின் தட்ஜனா மரியாவுடன் மோதுகிறார். மார்கரட் கோர்ட்டின் 24 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களைச் சாதனை செய்யும் முனைப்புடன் களமிறங்கும் செரீனாவுக்கு போட்டி அட்டவணை கடும் சவால் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

செரீனா கால் இறுதிக்கு முந்தைய சுற்றில் முதல் நிலை வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா ஹாலப்பை சந்திக்க வாய்ப்பு உள்ளது. இந்த சுற்றை கடந்தால் கால் இறுதியில் 7 ஆம் நிலை வீராங்கனையான செக்குடி யரசின் கரோலினா பிளிஸ்கோவா வுடன் செரீனா மோதக்கூடும்.

காயம் காரணமாக 4 மாதங் களுக்குப் பிறகு களத்துக்கு திரும்பியுள்ள சிமோனா ஹாலப் தனது முதல் சுற்றில் எஸ்டோனி யாவின் கயா கனேபியுடன் மோதுகிறார்.

நடப்பு சம்பியனான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி தனது முதல் சுற்றில் பெல்ஜியத்தின் அலிசன் வானை எதிர்கொள்கிறார். வோஸ்னியாக்கி 3 ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ரபோவாவை எதிர்கொள்ளக்கூடும்.



## சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான குற்றங்கள், தீவிர சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளன என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் –

எதிர்காலத்தில் மீறல்கள் இடம்பெறாதமையைத் தடுப்பதற்கான போருக்குப் பிந்திய பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களின் போது படையினர் குறித்து விசாரணைகளை மேற்கொள்வது மிகமுக்கியமானது.

2009 உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களின்போது 58ஆவது படைப்பிரிவின் தளபதி என்ற அடிப்படையில் சவேந்திர சில்வா சர்வதேச மனிதாபிமானச் சட்ட, மனித உரிமைச் சட்டமீறல்களில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள படையணியின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகக் காணப்பட்டார்.

மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்த தனது வாக்குறுதிகளை இலங்கை மிகமெதுவாகவே நிறைவேற்றி வரும் தருணத்திலேயே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

உண்மை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடு குறித்த விடயங்களில் அரசு சிறிதளவு முன்னேற்றத்தை எட்டியிருந்தாலும் போர்க் குற்றங்களை விசாரணை செய்வது, போதுமான ஆதாரங்கள் காணப்பட்டால் சந்தேகநபர்களை விசாரணைக்கு உட்படுத்துவது ஆகிய விடயங்கள் குறித்து அரசு வலுவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

நீதி மற்றும் பாதுகாப்பு சீர்திருத்தம் தொடர்பான தனது வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். – என்றுள்ளது. (ஐ)

## அமெரிக்காவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமரவீர வொஷிங்டன் பயணமானார்.

நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி கிறிஸ்ரின் லெகாட் மற்றும் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி உள்ளிட்ட உயர்நிலை அதிகாரிகளைச் சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சிலரும் இந்த விஜயத்தில் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## ஆசியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்தீர்கள், இதன் நோக்கம் என்னவென்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு புகழ்ந்து பேசினார்.

'டான் நியூஸ்' தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவரிடம் மேற்படி கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் ஆளுநர் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒரு மூத்த, கௌரவமான அரசியல்வாதியாகவே சம்பந்தன் ஐயாவை பார்க்கின்றேன். நாடாளுமன்றத்திலும் சிரேஷ்ட உறுப்பினராகப் பல வருடங்கள் பதவி வகிக்கின்றார்.

சமநிலைக்கான அரசியலைக் கொண்டு வருவதற்காக ஜனநாயக ரீதியில் பேச்சுகளை நடத்துவதில் முன்னின்று செயற்படுகின்றார்.

எவ்வளவுதான் விமர்சனம் முன்வைத்தாலும், வீழ்த்த நினைத்தாலும் அனைவரையும் தந்தை போல் அரவணைத்துத் தமது கடமையைச் செய்து வருகின்றார்.

இந்த வயதிலும் இதே மூச்சுடனும், பேச்சுடனும் தமிழ் மக்களுக்கான உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தேசியத் தலைவர் சம்பந்தன்.

ஆசியாக் கண்டத்திலேயே அவரைப் போல் ஒரு தலைவரைப் பார்க்கக் கிடைக்காது.

எனவே, யாழ். தேசிய மண்ணில் காலடி வைப்பதற்கு முன்னர் அவரைச் சந்திக்காமல் வந்திருந்தால் அது தவறாக அமைந்திருக்கும் – என்றார். (ஐ)

## பொது ஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தற்போது தேவையற்ற வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. பொதுஜன பெரமுன சார்பில் வெற்றிபெற கூடிய ஒருவரையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ களமிறக்குவார் என்பதில் எவ்வித விட்டுக்கொடுப்புக்களும், மாற்றங்களும் கிடையாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதில்லை என்று ஆரம்பத்திலே குறிப்பிட்டுள்ளார். தற்போதும் அவர் தானே வேட்பாளராகப் போட்டியிடுவேன் என்று எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால் அவரைக் காரணம் காட்டி அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள முயற்சிப்பவர்களே அவரையும் இக்கட்டான நிலைக்குத் தள்ளி விடுகின்றனர்.

புதியதாக அமைக்கப்படும் கூட்டணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராகப் போட்டியிட்டால் தாம் ஆதரவு வழங்க போவதில்லை என்று பொதுஜன பெரமுன மாகாண சபை உறுப்பினர்கள் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளனர். இது மாகாண சபை உறுப்பினர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். இவ்விடயம் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் முக்கிய தரப்பினர்களிடம் இருந்து எவ்வித பதில்களும் கிடைக்கப் பெறவில்லை. தேர்தல் ஒன்றில் வெற்றிப் பெறுவதையே அனைவரும் எதிர் பார்ப்பார்கள்.

பொதுஜன பெரமுன சுதந்திர கட்சியுடன் கூட்டணியமைத்தாலே இந்தப் பிரச்சினை தோற்றம் பெறும். நாங்கள் சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு பிரதான காரணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்படும் அனைவரையும் ஒன்றிணைக்கவும், இடைக்கால அரசை ஏற்படுத்தி ஜனாதிபதி மஹிந்தவின் மீது நம்பிக்கை வைத்து பொறுப்புக்களை ஒப்படைத்தமையின் ஊடாக ஏற்பட்ட நல்லுறவை பலப்படுத்தவே தவிர எங்களின் பலவீனத்துக்கு அல்ல என்பதை சுதந்திரக் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## ஒரு மித்த நாடு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் யோசனையினுள் ஒருமித்த நாடு என்ற வார்த்தைக்குத் தெளிவான பொருள் விளக்கம் அளிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன், தற்போது கொண்டு வரப்பட்டுள்ள யோசனைக்கு அமைய அரசமைப்பு உருவாக்கப் படும் பட்சத்தில், அதற்கு ஆதரவளிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த 3 வருடங்களாக தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய அரசமைப்பை கொண்டுவருவதாகக் கூறி புதிய அரசமைப்புக்கு கட்சிகளினால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அது வெறுமனவே கிணற்றில் போட்ட கல்லாகவே இருக்கப்போகின்றதே தவிர அந்த புதிய அரசமைப்பானது நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளப்போவதுமில்லை. அதற்குப் பிற்பாடு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போவதுமில்லை. அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்போவதுமில்லை.

எனவே இது எந்வொரு பிரயோசனமும் இல்லாமலே இருக்கப்போகின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக் கூடியவர்கள் தமிழ் மக்களுக்குப் போரினால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாகவோ, அபிவிருத்தி தொடர்பாகவோ எந்தவொரு நிபந்தனைகளும் விதிக்காமல் அரசுக்குப் பாதுகாப்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழ் மக்களின் நலன் சார்ந்த நிபந்தனைகளை முன்வைக்காமல் அதற்குப் பிற்பாடு நாடாளுமன்றத்தில் பேசுவதால் எந்தப் பயனுமில்லை – என்றார். (ஐ)

## புதியஅரசமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே சு.கவின் உபதலைவர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னிரிமை அவ்வாறே தொடரவேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படக்கூடாது. பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கக்கூடிய திட்டங்கள் இடம்பெறக்கூடாது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசமைப்பு இயற்றப்படவேண்டும். நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் அது தயாரிக்கப்படுமானால் அதற்கு ஆதரவளிக்கப்படும். எதிர்க்கட்சியில் இருப்பதால் அனைத்தையும் எதிர்க்க வேண்டும் என அவசியமில்லை.

சுமந்திரன் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் தேவைக்கேற்ப நாட்டில் சட்டங்களை இயற்ற இடமளிக்கமாட்டோம் – என்றார். (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் 21 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணிலுக்கு எதிராக உருவாக்கப்படும் மெகா கூட்டணி அடுத்த மாகாண சபைத் தேர்தல், பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி என எந்த தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்ளும்.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரே நிறுத்தப்படுவார். தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முன்னணியில் இருக்கின்றார். அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். ஆனால், யார் தேர்தலில் போட்டியிடுவது என்று மைத்திரிக்கும் கோட்டாபயவுக்கும் தீர்மானிக்க முடியாது.

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை மைத்திரிபால சிறிசேன – மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைக்கப்படும் கூட்டணியின் தலைவர்களே தீர்மானிப்பர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டால், பிரசார மேடையில் முதலில் கோட்டாபய உரையாற்றுவார். கோட்டாபய வேட்பாளரானால், முதல் உரையை மைத்திரி ஆற்றுவார் – என்றார். (ஐ)

## வெளிநாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற நிலையில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது வேடிக்கையானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, புதிய அரசமைப்பு சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் சமூக ஊடகங்கள் வாயிலாகத் தேவையற்ற பயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண கூறியுள்ளார். (ஐ)

## வரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர், சரியான சுகாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நான் சிங்கப்பூரின் சிங்க ஹெல்த்திட்டத்துடன் பேச்சு நடத்தி இலங்கையின் சுகாதார ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளேன்.

மருத்துவர்கள் உட்பட முகாமைத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும். வளர்ந்த நாடுகளில் எப்படி சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன போன்ற பயிற்சி இதில் வழங்கப்படுகிறது.

தனியார் மருத்துவமனைகளுக்கு விலை நிர்ணயம் செய்ய தயாரான நிலையில், ஜனாதிபதி எமது அரசை கலைத்துச் சூழ்ச்சி அரசு ஒன்றை நியமித்தார். மீண்டும் எமது அரசு பதவிக்கு வந்துள்ளதால், தனியார் மருத்துவமனைகளுக்கு விலை நிர்ணயம் அறிமுகப்படுத்தப்படும்.

இனிப்புப் பானங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியைச் சூழ்ச்சி அரசு நீக்கியது. இதுதான் இவர்களின் தேசப்பற்று. குழந்தைகளைக் கூட காட்டிக்கொடுத்து அவர்கள் தமது பைகளில் பணத்தைப் போட்டு கொள்ள முயற்சிக்கின்றனர்.

குறைக்கப்பட்ட வரியை நாங்கள் மீண்டும் அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம். நிதியமைச்சருடன் பேச்சு நடத்தி வர்த்தமானி வெளியிடப்படும். தவறான உணவுப் பழக்கங்களில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும் – என்றார். (ஐ)

## பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

907 மாணவர்களில் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 749 மாணவர்கள் பட்டப் படிப்பைத் தொடர முடியாது நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த டிசெம்பர் இறுதியில் வெளியிடப்பட்டது.

ஒன்லைனில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் நாள் பெப்ரவரி முதலாம் திகதி யாகும்.

2018/2019ஆம் கல்வியாண்டில் நாட்டிலுள்ள 15 பல்கலைக் கழகங்களுக்கும் 31 ஆயிரத்து 158 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

2017/2018ஆம் கல்வியாண்டில் நாட்டிலுள்ள 15 பல்கலைக் கழகங்களுக்கும் 30 ஆயிரத்து 513 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அதனடிப்படையில் 2018/ 2019ஆம் கல்வியாண்டில் 645 மாணவர்கள் மேலதிகமாக பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப் படுகின்றனர்.

2017ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2 லட்சத்து 53 ஆயிரத்து 483 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 104 பேர் பல்கலைக்கழகங்க அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருந்தனர்.

2018ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3 லட்சத்து 21 ஆயிரத்து 462 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 907 பேர் பல்கலைக்கழகங்க அனுமதிக்கான தகுதியைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கோரினார் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சர் ரவூக் ஹக்கீமைச் சந்தித்த போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்

கடந்த 28 வருடங்களுக்கு முன்னர் வவுனியா பல்கலைக் கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக இயங்கிவரும் நிலையில் பலரது வேண்டுகோளுக்கமைய வன்னிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த உயர்கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் இது வரை வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையிலேயே மேற்படி சந்திப்பு நடைபெற்றது.

உயர்கல்வி அமைச்சருடனான சந்திப்பில் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், பல்கலைகழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மோகன் டி சில்வா , வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# 40 வருடங்களுக்குள் வடக்கு அரைப் பாலைவனமாகும்!

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 13

காலநிலை மாற்றத்தின் காரணமாக வடக்கு மாகாணம் கடுமையான சவால்களை எதிர்நோக்குகின்றது என நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



அடுத்த 30 முதல் 40 ஆண்டுகளில் வடக்கு அரைப் பாலைவனமாக மாறும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணம் மோசமான பாதிப்புற்ற பிரதேசமாகும். மழை பற்றாக்குறை, வெள்ளம் மற்றும் கடலால் சூழப்பட்ட வடக்கு மாகாணத்தை எதிர்மறையாகப் பாதிக்கிறது.

அதற்கான நிலையான அபிவிருத்தியை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, மாகாணத்தை அத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு ஒரு நடைமுறை தேவை – என்றார். (ஐ)

# அமெரிக்கத் தூதரகத்தில் அதிகாலையில் தீவிபத்து!

கொழும்பு, ஜன. 13

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடத்திலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 4 தீயணைப்பு வாகனங்கள் 12 தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை. (ஐ)

# பிலியந்தலையில் இளைஞர் கொடூரமாக வெட்டிக்கொலை!

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெடிகம வீதியில் சடலம் ஒன்று உள்ளதாகப் பிலியந்தலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரவு 11.10 மணியளவில் சடலம் இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இரத்மலானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலத்தின் தலை மற்றும் நெஞ்சுப் பகுதியில் வெட்டுக் காயங்கள் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பிலியந்தலைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மக்களின் ஆதரவு ரணிலுக்கு இல்லை

## கூறுகிறார் தினேஷ் குணவர்தன



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு நாட்டு மக்களிடையே ஆதரவு இல்லை என்று நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களை ஒன்று சேர்த்து ஓர் அரசை உருவாக்குவதற்கு மாத்திரமே ஆளுமை இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொஸ்கம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே தினேஷ் குணவர்தன இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இருக்கும் வரை மாத்திரமே பிரதமர் பதவியை வகிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

# போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சவேந்திர சில்வாவுக்குப் பதவியுயர்வா?

## காணாமற்போனோரின் உறவினர்கள் கொதிப்பு



கொழும்பு, ஜன. 13

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா நியமிக்கப்பட்டமைக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு – கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கனகரஞ்சினி ஜோகராசா தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசின் ஊடாக வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும், அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நோக்கில் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினை சந்தித்து எங்கள் கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால், இன்று வரை எமக்கான தீர்வு கிடைக்கவில்லை. இன்று வரை நாம் எமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

தற்பொழுது இறுதிப் போரில் ஈடுபட்ட போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கின்றது.

போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சரணடையும் போது மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கிய படையணி ஊடாகவே அவர்களைக் கையளித்திருக்கின்றோம். அவர்கள் ஊடாக கையளிக்கப்பட்டவர்களே காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். இது வேதனைக்குரிய விடயம்.

இறுதிப் போரில் சரணடைந்தவர்கள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற கேள்விக்குப் பதிலளிக்கக்கூடிய பொறுப்புவாய்ந்த அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இருக்கின்றார். இந்நிலையில், அவர் ஊடாக எங்களுக்கு நீதி கிடைக்குமா? என்ற கேள்வி எழும்புகின்றது?

நாங்கள் இரண்டு வருடமாக வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தெருவில் இருந்து தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். நாங்கள் நாளாந்தம் வேதனைப்பட்டுச் செத்து மடிந்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற பதிலைத் தரவேண்டிய பொறுப்பில் சவேந்திர சில்வா இருக்கின்றார்.

இந்நிலையில், அவரை மேலும் பாதுகாக்கும் முகமாக ஜனாதிபதியினால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் கண்டிப்பதோடு மிகவும் கவலை அடைகிறோம். எங்களுக்கான நீதியினை இந்த அரசாங்கம் பெற்றுத்தரவேண்டும் – என்றார். (ஐ)

# மைத்திரி - கோட்டா கொலைச் சதி: பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு

கொழும்பு, ஜன. 13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ கொலைச் சதி விவகாரம் தொடர்பில் வாக்குமூலமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆரியனந்த வெலியங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் கோட்டாபய ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக ஊழல் எதிர்ப்புப் படையணியின் பணிப்பாளர் நாமல் குமார வெளிப்படுத்தியுள்ள தகவல் தொடர்பில் விசாரணையை மேற்கொள்வதற்காகவே பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாமல் குமாரவினால் வெளிப்படுத்தப்பட்ட ஜனாதிபதி மற்றும் கோட்டாபய தொடர்பிலான கருத்து இலங்கை அரசியலில்



தொடர்ந்தும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோசடி தராசுகள் அளவு கருவிகள் வைத்திருந்த 119 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

## முத்திரையிடலை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்குடாநாட்டில் நடப்பாண்டிற்கு முத்திரையிடாத தராசுகள் மற்றும் அளவீட்டுக் கருவிகள் வைத்திருந்த 119 வர்த்தகர்கள் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை முத்திரையிடல் பணி மேற்கொள்ளாத வர்த்தகர்கள், யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள அளவீட்டு அலகுகள் நியமங்கள் கோவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறியத் தருகின்றார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் –

அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் உத்தியோகத்தர்களால் கொட்டடி, நாவாந்துறை, சின்னக்கடை, கல்வியங்காடு, குருநகர் வாடி, காக்கைதீவு, சாவகச்சேரி, கொடிகாமம் மீன்சந்தைகளிலும், மரக்கறிச் சந்தைகளிலும் மோசடி செய்யப்பட்ட தராசுகளும், பிழையான தராசுகளும், நடப்பாண்டிற்கு முத்திரையிடாத தராசுகளும் பயன்படுத்த வைத்திருந்த 60 வர்த்தகர்களிற்கு எதிராகவும் –

யாழ் நகர், பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, புத்தூர் இடங்களிலுள்ள பழக்கடைகள், நகைக்கடைகள், பலசரக்குக் கடைகள், விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், இரும்புங்கள், புடைவைக் கடைகள், உரவிற்பனை நிலையங்களை வைத்திருந்த 59 வர்த்தகர்களிற்கு எதிராகவும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்களின் நிறுவை அளவை மற்றும் நிறுக்கும் அளக்கும் உபகரணங்களிற்கு யாழ் மாவட்ட செயலகத்திலுள்ள அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் பிரிவில் 16ஆம் திகதி முத்திரையிடல் பணி நடைபெறும்.

1995 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும், நியமங்களும் சேவைகளும் சட்டத்தின் பிரகாரம் நடப்பாண்டிற்குரிய முத்திரையிடாத நிறுக்கும் அளக்கும் உபகரணங்களை வர்த்தகத்திற்கு பாவிப்பது மாத்திரமல்லாது வைத்திருப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும் என அறியத்தருகின்றேன்.

தராசுகள் நிறுவை அளவைகள் தொடர்பில் பொதுமக்கள் யாழ் மாவட்ட செயலகத்தில் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் திணைக்களத்துடன் 021 221 7399 இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமாக நேரடியாக அல்லது கடித மூலமாக தொடர்பு கொள்ளலாம் என அறியத்தருகின்றேன். – என்றுள்ளது (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.